1.9.54

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

3 - SEP 1954
848
3.74
24 19

2

கேட்டீர்களா!

பாரத ரத்னம், பத்ம விபூஷணம்

ராஜாஜி, ராதாகிருஷ்ணன், ஸி. வி. ராமன் ஆகிய மூவருக்கும் இந்தியாவிலேயே. மிக உயர்ந்ததான பாரதரத்னம் என்ற பட்டம் சுதந்தர தினத்தன்று ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாக பத்ம விபூஷணம் (இரண்டாம் வர்க்கம்) என்ற பட்டம் சென்னை சர்வகலாசாலை உப அத்யட்சகர் ஸ்ரீ லட்சுமணசாமி முதலியார் அவர்களுக்கும் கே. எஸ். கிருஷ்ணன், எம் எஸ். சுப்பு லக்ஷ்மி அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பட்டுக்கோட்டை - தஞ்சை ரெயில்பாதை

தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டைக்கு நேர் ரெயில்பாதை ஒன்று (28 மைல் நீளம்) அமைக்கப்போகிறார்கள் இந்த ஏற்பாடு இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. உசிலம்பட்டி - போடி ரெயில்பாதை சமீபத்தில் திறக்கப்பட்டுள்ளது.

சென்னையில் கண்காட்சி வண்டிகள்

இந்திய ரெயில்வே சதாப்தி சென்ற வருஷம் ஏப்ரல் 16-ஆம் தேதி நடைபெற்றது. அந்தச் சதாப்தி கண்காட்சி ரெயில்கள் இப்பொழுதுதான் சென்னை வந்தடைந்துள்ளன. பீச் ரெயில்வே ஸ்டேஷனில் இந்தக் கண்காட்சியை, சென்னை கவர்னர் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். 21-ஆம் தேதியிலிருந்து பத்து நாட்கள் இந்தக் காட்சி நடைபெறுகிறது. தினசரி மாலை 3 மணியிலிருந்து இரவு 10 மணி வரையிலும் பொதுமக்கள் போய்ப் பார்க்கலாம். பெரியவர்கள், குழந்தைகள் யாராயிருந்தாலும் கட்டணம் நாலு அணா என்று வைத்திருக்கிறார்கள். 1853-ஆம் வருஷம் 22 மைல் நீளமே போடப்பட்ட ரெயில்பாதை 1953-இல் (பர்மா-பாகிஸ்தான் பிரிந்த பிறகு) 35,000 மைல் நீளம் இருக்கிறது. 38 லட்சம் ரூபாய் அப்போது மூலதனம். இப்போது 862 கோடி ரூபாய். 19000 ரூபாய் அப்போது வருஷ வருமானம்; இப்போது 294 கோடி ரூபாய்!

வாசனை டிராம் வண்டிகள்

ஜப்பான் தேசத்தின் தலைநகரான டோக்கியோவில் 55 வாசனை வீசும் டிராம் வண்டிகள் மாலை நேரங்களில் விடப்படுகின்றனவாம். வாசனைத் திரவியக் கம்பெனி ஒன்றின் புது மாதிரியான விளம்பர ஏற்பாடு இது.

தேசிய கால்பந்துப் போட்டி

தேசிய கால்பந்துப் போட்டியின் இறுதியில் பம்பாய் வென்றது. இறுதிப் போட்டி வரையில் வந்த வீரர் படை தோற்றது.

கிளைடர் விமானம்

குரோம்பேட்டையிலுள்ள இன்ஜினியரிங் தொழில் நுட்பக் கல்லூரி ஒரு கிளைடர் விமானத்தை உற்பத்தி செய்துள்ளது. இந்தியாவில் முதல் முதலாகத் தயாரிக்கப்பட்டுள்ள பிரைமரி கிளைடர் விமானம் இதுதான். இது திருப்திகரமாகப் பறக்கவிடப்பட்டது.

(19)
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - SEP 1954
MADRAS
21792

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 17

1-9-'54

குழந்தைகளே!	பக்கம்	2
வீர விஜயன்	..	3
லீடர் மணி	..	9
துடுக்குத்தனம்	..	15
எங்கள் பகுதி	..	19
உழைத்த பணம்	..	21
அன்பு	..	24
தூங்கும் அழகி	..	29
கேளுங்கள், சொல்கிறேன்!	..	30
சந்திரகிரிக் கோட்டை	..	33
அருமையான சம்பவம்	..	37
உலகம் சுற்றும் இளைஞர்	..	38

கேட்டீர்களா! - 2-ஆவது அட்டை

கண்ணன் கிளைக் கழகம் - 3-ஆவது அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

உயர்ந்தது!

"உசந்த சேமியா வேணும்னீங்களே! எவ்வளவு உசரம் பாத்தீங்களா?"

குழந்தைகளே!

இதோ எதிர்ப் பக்கத்தில் பரிசு பெற்ற கதை வெளியாகியிருக்கிறது. படித்துப் பார்த்துவிட்டு உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள். போட்டிக்குப் பல நூறு கதைகள் வந்தன. ஆயினும் பஞ்சாயத்தார் அவற்றில் சில கதைகளை மட்டுமே தேர்ந்தெடுத்தார்கள். இதைவிடப் பிரமாதமான கதைகளைப் பலர் எழுதக் கூடும். ஆயினும் வந்தவற்றில் எது சிறந்ததோ அதைத்தானே நாங்கள் தேர்ந்து எடுத்துப் பரிசு கொடுக்கமுடியும்? வந்தவற்றுள் சிறந்த கதையை எழுதிப் பரிசுபெற்ற என். ஏ. பாலகிருஷ்ணனுக்கு உங்கள் சார்பாக என் வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காந்திஜி மண்டப நிதியைப்பற்றி முன்பு கண்ணனில் எழுதியிருந்தேன். புனாவிலிருந்து ஒரு குழந்தை ஐந்து ரூபாய் அனுப்பியிருக்கிறாள். இந்தக் குழந்தையின் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். இந்தப் பணம் சென்னை கவர்னரிடம் சேர்ப்பிக்கப்படும். பணம் அனுப்பிய குழந்தையின் பெயர்: குமாரி ஆர். சுபத்ரா, 19, பம்பாய் ரோடு, புனா-3. இன்னும் சில குழந்தைகள் பணம் அனுப்பலாமா என்று கேட்டிருக்கிறார்கள். தாராளமாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு அனுப்பலாம். அனுப்பியவர்களுடைய பெயரை வெளியிட்டு மொத்தப் பணத்தையும் நிதியில் சேர்த்துவிடுகிறேன்.

உலகமெல்லாம் சுற்றி வரும் ஜெர்மன் இளைஞர் கூறுவதைக் கவனமாகப் படியுங்கள். அவர் நம் இந்தியாவைப் பார்த்து மலைக்கிறார், நம் இலக்கியங்களைப் பார்த்து மலைக்கிறார், மக்களைப் பார்த்து மலைக்கிறார். குழந்தைகளைப் பார்த்து மலைக்கிறார். அதிலும் தென்னாட்டுக் குழந்தைகளைக் கண்டு பிரமிக்கிறார். அவர் பிரமிக்கும்போதெல்லாம் நமக்குப் பெருமையாக இருக்கிறது. உலகமே உங்களைக் கண்டு பிரமிக்கும்படி நீங்கள் முன்னேற வேண்டும். அதற்காகவே இந்தப் பேட்டியை வெளியிட்டிருக்கிறேன்.

போதிய இடமில்லாத காரணத்தால் எங்கள் பகுதியையும் தூங்கும் அழகியையும் கொஞ்சமாக வெளியிட நேர்ந்துவிட்டது. அடுத்த இதழில் இந்தக் குறையை நிறைவாக்கி விடுகிறேன்.

கண்ணன் வெளியீடுகளின் விலைப் பட்டியலைக் கேட்டவர்களுக்கெல்லாம் அனுப்பி வருகிறோம். கண்ணன் கழக அங்கத்தினராக இல்லாதவர்கள் எல்லாரும் கமிஷன் இல்லையா என்று கேட்கிறார்கள். அவர்கள் உடனே மூன்று கூபன்கள் அனுப்பி மெம்பராவதே நலம். அங்கத்தினர்களுக்கும் சந்தாதார்களுக்கும் ரூபாய்க்கு இரண்டணா கமிஷன் உண்டு. முன் பணமாக அனுப்புகிறவர்களுக்குத் தபால் செலவும் இல்லை. ஒரு ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை மணியார்டர் மூலமாக அனுப்புங்கள். அணாத் தொகையைத் தபால் தலையாக அனுப்பிவிடலாம்.

—ஆசிரியர்.

டைம்பீஸ்

பரிசுப் போட்டிக் கதை

N.A. பாலகிருஷ்ணன்

மகேந்திரபுரி அரசர் பூபாலர். பட்டமகிஷியின் பெயர் நீலாவதி. கலாவதி அவர்களுக்கு ஒரே மகள். அரசருக்கு வயதாகிவிட்டபடியால் கலாவதிக்கு மணம் செய்விக்க எண்ணினார். ராணியின் தம்பி கருணாகரன் கலாவதியைத் தானே கல்யாணம் செய்துகொண்டு

பட்டத்துக்கு வர விரும்பினான். ஆனால் அவன் துஷ்டன். அவனிடம் நாட்டை ஒப்படைத்தால், நாடு சீர்கெட்டுவிடும் என்று அரசருக்குத் தெரியும்.

ஒரு நாள் காலை அரசர் கலாவதியை அழைத்துவர ஆளனுப்பினார். அவள் வந்ததும் அரசர் அவள் விருப்பத்தைக் கேட்டார். கலாவதி சிறிது யோசித்துவிட்டு, "அப்பா! தங்களுடைய சொல்லுக்கு நான் மறுப்புச் சொல்லப் போவதில்லை. நான் வீரமுள்ள இளைஞனையே மணக்க விரும்புகிறேன். ஆகையால் யோசித்து நான் சாயந்தரம் பதில் சொல்கிறேன்" என்றாள்.

அன்று மாலையே கலாவதி வந்து, "அப்பா! ஒரு நாட்டைப் பாதுகாக்க வீரம் தேவை. அதைப் பரிசோதிக்க நாம் இரண்டு பரீட்சைகள் நடத்தவேண்டும். முதலாவது நம் லாயத்திலுள்ள முரட்டுக் குதிரை வேணியை அடக்க வேண்

டும். இரண்டாவது வடக்கே நூறு காத தூரத்தில் ஒரு பாழடைந்த நகரம் இருப்பது உங்களுக்குத் தெரியும். அந்த நகரத்தில் அரண்மனை இருக்கிறது. அதில் ஒரு வைரக்கல் இருக்கிறது. அதைச் சுற்றி ஒரு பாம்பு படுத்திருக்கிறது. அந்தப் பாம்பைக் கொன்று, வைரக்கல்லைக் கொண்டு வர வேண்டும். இந்த இரண்டு பரீட்சைகளிலும் வெற்றி பெறும் இளவரசனையே நான் மணப்பேன்" என்று கூறினாள். அரசன் அவளுடைய யோசனையை மெச்சி மந்திரியை வரவழைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார்.

மறுநாள் காலை ஐம்பத்தாறு தேச அரசகுமாரர்களுக்கும் ஓலை மூலம் செய்தி சென்றது.

இதைக் கேள்விப்பட்டான் கருணாகரன். "மாமா! கலாவதிக்கு நானிருக்கும்போது வேறு ஒருவனை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?" என்று படபடப்புடன் கேட்டான். அரசர் நிதானமாக, "கருணாகரா! இது கலாவதியின் விருப்பந்தான். நீயும் இந்தப் பரீட்சைகளில் வெற்றி பெற்று அவளை மணக்கலாம்" என்றார். கருணாகரன் கோபத்துடன் திரும்பினான்.

குறிப்பிட்ட நாள் வந்தது. அன்று அரண்மனைக்கு எதிரிலுள்ள மைதானத்தில் மக்கள் திரள் திரளாகக் குழுமியிருந்தார்கள். அரண்மனை வாயிலில் பல ஆசனங்கள் இருந்தன. சிறிது நேரத்தில் அரச குடும்பத்தினரும், மந்திரிகளும், போட்டியில் கலந்து கொள்ள வந்திருந்த அரசகுமாரர்களும் வந்து ஆசனத்தில் அமர்ந்தார்கள். சேவகர்கள் நான்கு பேர்கள் முரட்டுக் குதிரை வேணியை, சிரமப்பட்டு மைதானத்திற்கு இழுத்துக்கொண்டு வந்து நிறுத்தினர். வேடிக்கை பார்ப்பதற்காக வந்திருந்த மக்களிடையே ஒரே ஆரவாரமும், பரபரப்பும் ஏற்பட்டன. அரசர் எழுந்தார். சப்தத்தை அடக்கிவிட்டு, "மகா ஜனங்களே! முதல் போட்டியை இன்று ஆரம்பித்து வைக்கிறேன். இரண்டாவது பின்னர் நடைபெறும்" என்று சொல்லி அமர்ந்தார். போட்டி ஆரம்பமாகியது. முதலில் மாளவ தேசத்து அரசகுமாரன் போய் வேணியைத் தட்டிக்கொடுத்தான். அது படாரென்று ஓர் உதை விடவே அவன் மூக்கு உடைந்து, ரத்தம் கொட்டியது. அவன் உடைந்த மூக்கைப் பிடித்துக்கொண்டே போய்விட்டான். பிறகு பல்லவ ராஜகுமாரன் வந்து குதிரையைத் தடவிக் கொடுத்து மெல்ல ஏறி உட்கார்ந்தான். குதிரை பலமாகக் கனைத்துக்கொண்டே எகிறி, எகிறிக் குதித்தது. ராஜகுமாரன் குதிரையைப் பிடிக்க முடியாமல் கீழே விழுந்து பலமான அடியுடன் திரும்பினான். இப்படியாக ஒவ்வொருவராகச் சென்று காயத்துடன் வந்துகொண்டிருந்தனர். இதையெல்லாம் பார்த்த கருணாகரனுக்கு வயிற்றைக் கலக்கியது. மிகுந்த பயத்துடன் குதிரையை நெருங்கினான். குதிரை அவன் வருவதைப் பார்த்ததும் கனைத்துக்கொண்டே அவனை நோக்கிப் பாய்ந்தது. குதிரை பாய்ந்ததைக் கண்ட கருணாகரன், 'ஐயோ' என்று அலறிக்கொண்டே பதற்றத்துடன் ஓடினான். ஓடின

வேகத்தில் கால் இடறிக் கீழே விழுந்தான். முன் பல் இரண்டையும் காணோம்! உடனே சேவகர்கள் அவனை வைத்தியரிடம் அழைத்துச் சென்றார்கள்.

குதிரையை அடக்க அங்கு வேறு யாரும் முன் வரவில்லை. ஆகையால் அரசன் ஏமாற்றத்துடன் எழுந்திருப்பதற்குள் ஒரு குதிரை வேகமாக வந்து நின்றது. அதன் மீதிருந்து ஒரு கம்பீரமான அரசிளங்குமாரன் இறங்கி, அரசருக்கு வணக்கம் செலுத்தினான். "அரசே! நான் ரத்னபுரி மன்னன் மகன். என் பெயர் விஜயவர்மன். நான் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புகிறேன்" என்றான். அரசர் சம்மதிக்கவே, விஜயவர்மன் வேணியிடம் சென்றான். மெதுவாக அதைத் தடவிக் கொடுத்தான். அது பலமாகக் குதித்தது. விஜயவர்மன் சிறிது விலகிக் கொண்டான். அது நின்றதும் ஒரே தாவாகத் தாவி, மேலே ஏறி உட்கார்ந்துகொண்டான். மேலே இருந்த லகானைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். குதிரை வேகமாகக் குதித்துக் கொண்டே ஓடியது. விஜயவர்மன் லகானைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, குதிகாலால் குதிரையின் வயிற்றில் ஓங்கி உதைத்தான். அவன் உதைத்ததும் அதற்குக் கோபம் வந்துவிட்டது. நாலு கால் பாய்ச்சலில் வேகமாய் மைதானத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது. விஜயவர்மன் காலால் உதைத்துக்கொண்டே இருந்தான். குதிரை பல நூறு தடவை மைதானத்தைச் சுற்றிச் சுற்றி வந்ததால் களைத்துவிட்டது. பெருமூச்செடுத்தது; ஓடமுடியவில்லை. ஆகையால் அது கடைசியில் சாது போல் அடங்கிவிட்டது. இதைக் கண்ட ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். அரசர் அவனைப் பார்த்து மிகுந்த சந்தோஷத்துடன், "விஜயவர்மா! நீ மகா வீரன்" என்று புகழ்ந்து கூறினார்.

அரண்மனையில் விஜயவர்மனுக்கு ஏகத் தடபுடலாக விருந்து நடந்தது. அன்று மாலையில் அரசர் விஜயவர்மனிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, "விஜயா! நீ முதல் போட்டியில் வெற்றி பெற்றுவிட்டாய். இன்னும் ஒரு பரீட்சை

உண்டு" என்று இரண்டாவது போட்டியைத் தெரிவித்தார்.

இதையெல்லாம் மறைவிலிருந்து கருணாகரன் கேட்டுக் கறுவிக் கொண்டேயிருந்தான். அவனுக்குத் திடீரென்று ஒரு யோசனை உதித்தது.

மறுநாள் காலையில் விஜயவர்மன் அரசரிடம் விடைபெற்றுக் கொண்டு, வேணியின் மேலே ஏறி வட திசையில் பிரயாணமானான்.

இதைக் கவனித்த கருணாகரன் அந்த ஊருக்கு அடுத்துள்ள காட்டிற்குச் சென்றான். அங்குள்ள மந்திரவாதி அவனுக்கு மிகவும் வேண்டியவன். அவனிடம் சென்று, "மந்திரவாதி! வடக்குத் திசையில் ஓர் அரசகுமாரன் குதிரையில் சென்றுகொண்டிருக்கிறான். அவனைக்கொண்டு வந்து இந்தக் குகை

யில், அடைத்துவிடு. பிறகு நான் பார்த்துக்கொள்கிறேன்" என்ருன். மந்திரவாதி, "அப்பனே! அப்படியே செய்கிறேன்" என்ருன். கருணுகரன் ஒரு பொன் முடிப்பை அவன் கையில் கொடுத்துவிட்டுச் சென்ருன்.

மந்திரவாதி மந்திரக்கோலை எடுத்து மந்திரத்தை ஜபித்தான். உடனே விஜயவர்மனை ஏற்றிச் சென்ற வேணி அப்படியே கட்டுக் கடங்காமல் திரும்பியது. அவன் எவ்வளவு கட்டுப் படுத்தியும் முடியவில்லை. வேகமாகத் திரும்பி வந்த வேணி மந்திரவாதியின் குகைக்கு முன்ஞல் வந்து நின்றது. குகையை அடைந்ததும் விஜய வர்மனுக்கு மயக்கம் வந்துவிட்டது. அவனை மந்திரவாதி தூக்கி வந்து ஓர் அறையில் படுக்கவைத்தான். அங்கிருந்த ஒரு தாதியைக் காவல் வைத்துவிட்டு வெளியே சென்றுவிட்டான். இவள் எப்படியாவது மந்திரவாதியிடமிருந்து தப்பிச் செல்லச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் விஜயவர்மனுக்கு மயக்கம் தெளிந்தது. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அவனுக்கு மயக்கம் தெளிந்ததைக் கண்ட தாதி அங்கே வந்து, "இளவரசே! நீங்கள் ஒரு மந்திரவாதியின் குகையில் இருக்கிறீர்கள். நீங்கள் தப்பிவிடுங்கள்" என்ருள். "நான் எப்படித் தப்பிச் செல்வது?" என்று கேட்டான், விஜயன். தாதி சிறிது யோசித்துவிட்டு, "அதோ அந்த மூலையில் இருக்கும் செடியில் ஏதோ விசேஷம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் அவனுல் போக முடியவில்லை. அவன் பூஜை செய்யும் காளி சிலையின் வாயில் ஓர் எலும்புத் துண்டு இருக்கிறது. அதை எடுத்துவிட்டால் அவன் மந்திர சக்தி போய்விடும் என்று தெரிகிறது. இதைக் கொண்டு ஏதோ தப்பிவிடுங்கள். அவன் எங்கேயோ வெளியே போய் இருக்கிருன்" என்று காளி சிலை இருக்குமிடத்தைக் காட்டினுள். விஜயவர்மன் பாதுகாப்புக்காக உடைவாளை உருவிக்கொண்டு சிலையை நெருங்கினுன். ஆனுல் அதற்குள் வெளியே சென்றிருந்த மந்திரவாதி வந்துவிட்டான். மந்திரக்கோல் சிலைக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதை எடுக்க மந்திரவாதி வேகமாகச் சிலையிடம் சென்ருன். இதைப் பார்த்த விஜயவர்மன் 'சரே' லென்று பாய்ந்து மந்திரக்கோலை எடுத்துக்கொண்டான். மந்திர



வாதி அதிகாரத்துடன், "அதை இப்படிக் கொடுத்து விடு" என்றான். விஜயவர்மன் அலட்சியமாக, "நான் ஒன்றும் ஏமாளியல்ல, இதைக் கொடுக்க" என்று சிலையிடம் போய் அதன் வாயில் உள்ள எலும்புத் தண்டை எடுத்துக்கொண்டான். பிறகு அந்த மந்திரக்கோலை இரண்டாக ஒடித்து, ஓடிப்போய் மூலையில் உள்ள செடியையும் பிடுங்கி எறிந்தான். மந்திரவாதி 'ஆ' வென்று அலறியபடி கீழே விழுந்து உயிரை விட்டான். பிறகு விஜயவர்மன் தாதியைத் தன் அரண்மனைக்கு அனுப்பிவிட்டு, வடக்கே பிரயாணத்தைத் தொடங்கினான்.

மறுநாள் காலை கருணாகரன் மிகுந்த சந்தோஷத்துடன் காட்டிற்குச் சென்றான். எப்படியாவது மந்திரவாதியிடம் சொல்லி வைரத்தை எடுத்துவரச் செய்து, கலாவதியைத் தானே மணந்துகொள்ளலாம் என்று எண்ணியபடி குகைக்கு வந்தான். அங்கே மந்திரவாதி இறந்துகிடப்பதைக் கண்டு, பயந்துபோய் எடுத்தான் ஓட்டம்!

வடக்கே பிரயாணமான விஜயவர்மன் இரண்டு நாள் கழித்து அந்தப் பாழடைந்த நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அந்த ஊரின் மத்தியில் ஓர் அரண்மனை இருந்தது. அவன் அதற்குள் சென்று ஒவ்வோர் அறையாகப் பார்த்துக்கொண்டே சென்றான். அங்கே ஒருவருமில்லை. உள் அறை ஒன்றில் 'புஸ்...ஸ்' என்ற சப்தம் வந்தது. விஜயவர்மன் உடைவாளை உருவிக்கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான். அங்கே ஒரு பெரிய பாம்பு சீறிக்கொண்டே ஒரு வைரத்தைச் சுற்றிப் படுத்திருந்தது. அவன் மெதுவாக உள்ளே சென்றான். பாம்பு சீறிக்கொண்டே வேகமாகக் கடிக்க வந்தது. வந்த பாம்பை ஒரே வெட்டாக வெட்டினான். பாம்பு இரண்டு துண்டாகியது. பளிச்சென்று ஒரு மின்னல். அங்கே அரசன், அரசி, மந்திரிகள், சேவகர்கள் எல்லோரும் நின்றிருந்தனர். வெளியே ஊர் மக்கள் இருப்பதைப் போன்ற சப்தம் கேட்டது. விஜயவர்மன் ஒன்றும் புரியாமல் விழித்தான். அரசன், "இளவரசே! ஓர் அரக்கனின் மாயத்தினால் நாங்கள் எல்லோரும் இப்படி யார் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்துவிட்டோம். அந்தப்பாம்பு தான் அரக்கன். அதை நீ கொன்றதால்தான் எங்களுக்கு விமோசனம் ஏற்பட்டது. இந்தா, நீ தேடி வந்த வைரக்கல்" என்று அரசன் வைரத்தைக் கொடுத்தான். விஜயவர்மன் ஒருவாரம்போல் அங்கே தங்கி, அரசரிடமும் பொது மக்களிடமும் விடை பெற்றுக்கொண்டு மகேந்திரபுரியை நோக்கிப் பிரயாணமானான். இரண்டு நாளில் மகேந்திரபுரியை அடைந்தான். அங்கே அவனுக்குப் பலமான வரவேற்பு. அரசர் வைரத்தைப் பெற்றுக்கொண்டார். ஒரு நல்ல முகூர்த்தத்தில் விஜயவர்மனுக்கும் கலாவதிக்கும் திருமணமும் விஜயவர்மனுக்குப் பட்டாபிஷேகமும் நடந்தன. பல் போன கருணாகரன் இதையெல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். விஜயவர்மனும் கலாவதியும் வெகு காலம் நீதியுற ஆண்டுவந்தார்கள்.

மனம் குழம்பியவாறு மணி படுக்கையில் படுத்திருந்தான். இந்த ஊரில் இருப்பதா, வேண்டாமா என்றுகூட எண்ணிப் பார்த்துவிட்டான். பையன்களுக்குப் பயந்துகொண்டு படிப்பை விட்டுவிட்டு ஓடுவதா? எவ்வளவு அவமானம்? அவமானம் என்பதைத் தவிர அதில் வேறு இரண்டு சங்கடங்கள் இருந்தன. பணம் கட்டிப் பள்ளிக்கூடத்திலும் சேர்ந்தாகிவிட்டது. இனி போகாமல் எப்படி இருப்பது? ஊருக்குப் போனால் அவனுடைய கஷ்டத்தை உணர்ந்துகொண்டு அநுதாபப்பட அவன் சொந்த அம்மாவா இருக்கிறாள்? சித்தி வெறும் சண்டையோடு விட்டுவிட மாட்டாள். வீட்டை விட்டே போகும்படி ஏதாவது செய்துவிடுவாள்! இரண்டாவது சங்கடம் என்னவென்றால் அவன் வேறு எங்கே போவது? அப்படியே போவது என்றாலும் போகிற ஊர் இந்த ஊரைவிட மகா மோசமாக இருந்தால்—?

இருந்தால்—

எப்படிப் பார்த்தாலும் அந்த யோசனை நடக்கக்கூடிய சரியான யோசனையாக இல்லை. இங்கே இந்தப் பையன்களிடம் பெயர் சொல்லிச் சமாளிப்பதும் லேசான காரியமாகத் தோன்றவில்லை.

மணி இரண்டு மூன்று நாளாகப் பள்ளிக்குச் செல்லவில்லை. குமார் மட்டும் தினம் அவனை வந்து பார்த்துவிட்டுச் செல்வான்.

''பள்ளிக்கூடத்தில் என்னைப் பற்றி ஏதாவது பேசிக் கொள்கிறார்களாடா?'' என்று கேட்டான் மணி.

''உன் உடம்பைப் பற்றித்தான் சிலர் விசாரித்தார்கள்! வேறு ஒன்றும் இல்லை'' என்றான் குமார். உண்மையில் பையன்கள் அவனைப் பரிகாசம் செய்யத்தான் செய்தார்கள். 'அடி வாங்கின ஜுரம், அருட்டி ஜுரம்' என்றெல்லாம் கேலி செய்தார்கள். ''என்னடா, உன் சிநேகிதன் எப்படி இருக்கிறான்? இனிமே கிரௌண்டுக்கு வருவானா - இல்லே, கிராமத்துக்கே போயிடுவானா?'' என்று குமாரையே கிண்டல் செய்தார்கள்.

குமார் அதையெல்லாம் மணி யிடம் காட்டிக் கொள்ளவே யில்லை. அவனுக்கு மட்டும் வருத்தமாகவே இருந்தது; பய மாகவும் இருந்தது.

"ஊர் ஒத்துக்கொள்ளவில்லை. எல்லாம் இரண்டு நாளில் தானு கச் சரியாகிவிடும்" என்று அத்தை மணிக்குப் பத்தியமாகச் சாப்பாடு போட்டாள். அப்படித் தான் ஆயிற்று.

நாலாம் நாள் அத்தை பிள்ளை ராமு வந்து, "அம்மா! உன் மருமானல் எனக்கு மானம் போகிறது! 'ஊர் ஒத்துக்கொள் ளாமல் ஜுரம் வந்திருக் கிறதுடா' என்ருயே, ஊர் ஒத் துக்கொள்ளாமல் ஒண்ணும் இல்லை. உதைதான் ஒத்துக் கொள்ளவில்லை. இவனையெல் லாம் யார் அம்மா புட்பால் விளையாடப் போகச் சொன் னது?" என்று கத்தினன்.

"சரிதாண்டா போடா, விளை யாட்டு என்ருல் அப்படியும் தான் இருக்கும், இப்படியும் தான் இருக்கும். பாவம், தாயில் லாப்பிள்ளை! ஒன்றும் சொல்லா தேடா அவனை" என்ருள் அத்தை.

"இவனல் எல்லாரும் என் னைப் பரிகாசம் பண்ணுகிருர் களே!" என்ருன் ராமு.

"ஒன்றும் பண்ணமாட்டார் கள். பரிகாசம் செய்தால் அங்கே போகாதே!"

"இவனுக்காக நான் எங்கும் போகாமல் இருக்கவேண் டுமோ? ஏன், இவன்தான் போகாமல் இருக்கட்டுமே!"

"சரிடா மணி; இனிமே அங்கே இங்கே போய் வீணு



ிக்காதேடா!" என்றாள் அத்தை.

ஆயிரம் சொன்னாலும் பிள்ளைக்கு அம்மா விட்டுக் கொடுப்பாளா? ராமு தனியாக வந்ததும், "என்னவோ பாவம், தாயும் இல்லை; தகப்பனும் சரியில்லை. அதிர்ந்து அவனை ஒன்றும் சொல்லாதே!" என்று நயமாகக் கேட்டுக்கொண்டாள். பிள்ளை பெரிய தியாகம் செய்யவேண்டியிருக்கிறதே என்று ஒரு கரண்டி கெட்டித் தயிராகக் கையில் கூடவே கொடுத்தாள்.

மணிக்கு மனசு சங்கடமாகத்தான் இருந்தது; சமாதானப்படவே இல்லை. 'நான் என்ன நொண்டியா, முடமா, செவிடா, பைத்தியமா? என்னால் இவனுக்கு என்ன அவமானம் வந்தது?' என்று அவன் உள்ளம் குடைந்து கொண்டேயிருந்தது.

* * *

ஒரு வாரம் சென்றது.

பள்ளிக்கூடத்தில் நிலைமை கொஞ்சம் மாறியிருந்தது. விஷயம் பழசாகிவிட்டது ஒரு காரணம். ஒரு வாரம் போல் வராத மணி மெலிந்து காணப்பட்டான் என்பது இன்னொரு காரணம். மூன்றாவது காரணமும் ஒன்று உண்டு. குமார் மணியைப்பற்றிச் செய்த பிரசாரம் தான். அது மறைமுகமாக வேலை செய்து கொண்டிருந்தது. "போடா! அன்று மணி ஆட வரும்போதே நல்ல ஜுரத்தோடு வந்திருக்கிறான். வெளியில் சொல்லவில்லை. அவனுக்கே தெரியவும் இல்லை. ஆனால் ஜுரம் உள்ளூற இருந்தது அவனை அவமானப்பட வைத்துவிட்டது!" என்று பார்த்தவர்களிடம் எல்லாம் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தான்.

'ஒருகால் அப்படியும் இருக்குமோ?' என்று மற்ற நண்பர்கள் எண்ணத் தொடங்கிவிட்டார்கள். சந்தேகம் என்று ஆரம்பமாகிவிட்டால் அப்புறம் அது சும்மா இருக்குமா? 'இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்' என்ற அபிப்பிராயங்கள் கேலியை இல்லாமல் அடித்து



ஆபீஸர்: உத்தரவு இல்லாமல் உள்ளே வரக்கூடாது என்று போர்டு போட்டிருக்கே! ஏன் உள்ளே வந்தீர்?

வந்தவர்: உத்தரவு கேட்கத் தானே உள்ளே வந்தேன்.

—V.S. ராஜு, சிங்கநல்லூர், கோயமுத்தூர்.

விட்டன. இன்று அவனை நேரில் பார்த்தவர்கள் அவன் உடம்பைப் பற்றியே விசாரித்தார்கள். குமார் சொன்னதெல்லாம் உண்மைதான் என்றும் எண்ணினார்கள். மணி தான் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. 'இவர்கள் அப்படி ஒன்றும் மோசமான பையன்கள் இல்லை' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

ஆற்றிலே தண்ணீர் பெருகுவதும் வடிவதும் போலத்தான் சிறுவர்களுடைய உடம்பும்! இரண்டு நாளில் உடம்பு கயிறாக இளைத்துப் போகும்; இரண்டே நாளில் பூசினதுபோல் ஆகிவிடும். மணியின் மெலிந்த உடம்பு இரண்டே நாளில் பழைய நிலையை அடைந்துவிட்டது.

"என்டா மணி, இன்று சனிக்கிழமை ஆச்சே! எண்ணெய் ஸ்நானம் பண்ணேன்!" என்றாள் அத்தை. ராமு அப்போது பின் கட்டில் எண்ணெய்த் தலையோடு கண்ணைக் கசக்கிக்கொண்டு நின்றான்.

பச்சைக் குழந்தை மாதிரி மணிக்கு வீட்டிலே எண்ணெய் தேய்த்துக்கொள்ளப் பிடிப்பதில்லை.

"சரி, எண்ணெயும் சீயக்காயும் கொடு. நான் ஆற்றங்கரைக்குப் போகிறேன்" என்றான் மணி. ஜுரமாக இருந்த உடம்பு என்று அத்தைகூட முதலில் மறுத்தாள், கிராமத்திலே இதெல்லாம் சகஜம். அதனால் சம்மதித்து விட்டாள்.

மணி கையில் கிண்ணத்துடன் ஆற்றங்கரைக்குப் புறப்பட்டதைக் கண்ட இன்னும் இரண்டு மூன்று பையன்கள், "மணி, கொஞ்சம் இருடா! நாங்களும் வருகிறோம்" என்று கிளம்பினார்கள். குமார் செல்லப்பிள்ளை. அவனை ஆற்றங்கரைக்கு எல்லாம் அவன் வீட்டில் அனுப்பமாட்டார்கள். அதனால் மணி அவனை அழைக்காமலே மற்றப் பையன்களுடன் ஆற்றை அடைந்தான்.

தண்ணீரில் குதியம் போடுவதும் திளைவதும், கூட வரும் ஜமாவைப் பொறுத்த விஷயம். சரியான ஜமாவாக அமைந்துவிட்டால் தலைகால் தெரியாத உற்சாகம் பிறந்துவிடும். அன்றும் அப்படித்தான் ஆயிற்று.

ஒருவன் படுகையிலே வெட்டிப் போட்டிருந்த வாழைமரத்தைத் தூக்கி வந்தான். ஒருவன் ஆற்றில் மூழ்கி, தண்ணீரோடு போனான். ஒருவன் எதிர் ஆறு நீந்தினான். இப்படிச் சிறிது நேரம் நடந்தது.

பிறகு இரண்டு பேராகச் சேர்ந்துகொண்டார்கள். தெப்பக் கட்டைபோல வாழைமரத்தின் இரண்டு முனைகளிலும் உட்கார்ந்துகொண்டார்கள். கனம் தாங்காமல் அவர்கள் கழுத்து வரையில் அமிழ்ந்திருந்தார்கள். இருந்தாலும் இருவரும் ஜோடியாக, "ஹோ, ஹோ!" என்று சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கரையிலிருந்து பார்த்தால் இரண்டு தலைகள் மட்டும தண்ணீரில் மிதந்து வருவது போலிருந்தன.

மூங்கிலடியிலிருந்து வரும் ஆறுதானே! பார்க்கப்போனால் அவனுடைய ஊரில் ஆறு இன்னும் அகலமாயும் ஆழமாயும் இருக்கும். வரவர ஆறு குறுகித்தானே போகும்? அதனால் மணிக்குக் கொஞ்சம்கூடப் பயமாக இல்லை. அவன் பாலத்தின்மீது ஏறினான். இதுவரையில் யாரும் அவ்வளவு உயரத்திலிருந்து குதித்ததில்லை.

"கீழே குதித்தால் தரையில் அடிபடும்டா!" என்றான் நாகராஜன் என்ற பையன்.

"அடிபடாதுடா! அங்கே நல்ல ஆழம் இருக்குடா!" என்றான் வரதன்.

மணி உயரத்திலிருந்து வெறுமே கூடக் குதிக்கவில்லை. மூன்று கரணங்கள் அடித்துக் குதித்தான். மற்ற நண்பர்கள் மூவரும் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். மணி தண்ணீருக்குள் குதித்தவன் வெளிவரவேயில்லை.

"என்னடா, ஆளைக் காணோம்!" என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டார்கள். ஒருவன் அவன் குதித்த இடத்தில் போய் மூழ்கி மூழ்கிப் பார்த்தான். "காணோம்டா!" என்றான். தண்ணீருக்குள்ளாகவே ஆற்றோடு வெகுதூரம் போய் எழுந்திருப்பான் என்று எண்ணினார்கள்.

அப்படியும் அவன் கரை ஏறுவதாகத் தெரியவில்லை. மூவருக்கும் பயம் பிடித்துக் கொள்ளத் தொடங்கிவிட்டது. ஆற்றில் குளிக்கப் போய், திரும்பி வாராத பையன்களுடைய கதையெல்லாம் உடனே ஞாபகத்துக்கு வந்தது.



கோபால்: எங்கப்பா எவ்வளவு வேகமாய்ப் போற காரையும் நிறுத்திவிடுவார், தெரியுமா?

ஜம்பு: ஐயோ, அவ்வளவு பலசாலியா உங்கப்பா?

கோபால்: இல்லேடா எங்கப்பா டிராபிக் கான்ஸ்டேபிள்!

—சந்திரசேகரன், ஆரணி.

"என்னடா பண்றது?" என்று பேந்தப் பேந்த விழித்தார்கள். கரையில் எண்ணெய்க் கிண்ணமும் சீயக்காய்த் தூளும் இருந்தன. சட்டைத் துணியை அவற்றின் அருகே மணி காய வைத்திருந்தான். மற்றவர்களும் அங்கேதான் வைத்திருந்தார்கள். சற்று நேரத்துக்குள் அவர்கள் அடைந்த 'காபரா' இவ்வளவு அவ்வளவு என்று இல்லை. போலீஸ்காரர் வந்து பிடித்துக் கொண்டால் என்ன பண்ணுவது என்றுகூட எண்ணிவிட்டார்கள். மெதுவாக நழுவி விடலாமா என்று மூவரும் கரையேறத் தொடங்கும்போது, "தொமீல்" என்று மறுபடியும் சத்தம் கேட்டது.

பார்த்தால் மணிதான். மீண்டும் பாலத்திலிருந்து அக்தர் அடித்திருக்கிறான். "எப்படிடா கரையேறிப் போனான்?" என்று அவர்கள் ஆச்சரியத்தோடு கூப்பாடு போட்டார்கள். பிறகுதான் அவர்களுக்கு நல்ல மூச்சே வந்தது.

"என்ன தம்பிகளா! பயந்து போயிட்டீங்களா?" என்று கேட்டுக் கொண்டே மணி கரைக்கு நீந்தி வந்தான்.

"அப்பா, போதும் உன் விளையாட்டு. மரியதையாகச் சீயக்காய் தேய்த்துக்கொண்டு, முழுகிவிட்டு வா!" என்றான் கனகசுந்தரம்.

"அவசரமாக இருந்தால் நீங்கள் போங்கடா! எனக்கு வர நாழியாகும்" என்று சொல்லிவிட்டான்.

அவன் கடைசியில் தனியாகத்தான் புறப்பட்டான். சட்டையெல்லாம் மொடமொட வென்று காய்ந்திருந்தது. கண்ணெல்லாம் ஜிவஜிவென்று குங்குமமாய்ச் சிவந்துவிட்டது.

பன்னிரண்டு மணி வெயில். மணல் காலைப் பொசுக்கியது. அதனால் ஆற்றின் கரை வழியாகவே போய், தெருவைச் சுற்றிக் கொண்டு போகக் கிளம்பினான்.

"ஐயோ..ஐயோ!" என்று திடீரென்று ஒரு கூக்குரல் கேட்டது.

மணி திரும்பிப் பார்த்தான்.

'எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும். ஒரு பெண் ஆற்றில் மூழ்கி மூழ்கிக் கையைத் தூக்கினாள். தலைபின்னிவிடப் பட்டிருந்தது. போட்டிருந்த கவுன் உடம்பில் ஒட்டிக் கொண்டு அவளுடைய கையைத் தடுத்தது.

அந்தப் பெண் போட்ட கூச்சலைக் கேட்டு, பக்கத்துத் தெருவிலிருந்து சிலர் ஓடிவந்தார்கள்.

"ஐயையோ! ஆற்றிலே பெண் விழுந்துவிட்டது!" என்று கரையில் நின்றபடியே கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தார்களே ஒழிய ஒருவராவது துணிந்து தண்ணீரில் குதிக்கவில்லை.

ஒரு கணம்தான் ஆயிற்று. அடுத்த கணம் மணி கையிலிருந்த கிண்ணத்தைக் கரையில் எறிந்து விட்டுத் தண்ணீரில் பாய்ந்தான். என்ன துணிச்சல்! சுழன்று மடுவில் சுற்றிச் சுற்றி வந்த பெண்ணின் கையைப் பிடித்து ஓர் இழுப்பு இழுத்தான். நிலைக்கக் கூடிய ஆழம் வரவே அவளைக் கையில் தூக்கிக் கரைக்குக் கொண்டு வந்துவிட்டான்.

"யாரு பெண்? எப்படி விழுந்தாள்?" என்ற கேள்விகள் சரமாரியாக எழுந்தன. ஆனால் மணி மட்டும் பெண்ணுக்கு நல்ல மூச்சு வருவதில் முனைந்திருந்தான்.

(தொடரும்)

துடுக்குத்தனம்

நீலம்

அந்த வருஷம் எந்தப் பள்ளிக்கூடத்திலுமே இடம் கிடைக்கவில்லை. அகோரம் எவ்வளவோ தூரம் சிபாரிசுகளையெல்லாம் பிடித்துச் சிரமப்பட்டார். பலிக்கவில்லை. அனந்தராமனுக்கு எங்கும் 'அட்மிஷன்' கிடைக்காமல் போகவே, அவனை என்ன செய்வதென்று அவன் அப்பா அகோரத்துக்குப் புரியவில்லை.

பெயர் மட்டும்தான் அவனுக்கு அனந்தராமன் என்று இருந்ததே தவிர, அவனுடைய குணங்கள் எல்லாம் ஆஞ்சனேயர் வர்க்கத்தைச் சேர்ந்தவையாகத்தானிருந்தன. இதைப் புரிந்துகொண்டிருந்ததனாலேயே அகோரம் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்காமல் வீட்டோடு வைத்துக்கொண்டு வந்தார். கட்டுப்பாடுகள் இல்லாமல் வீட்டில் அவனுக்குச் சலுகைகள் வளரவே அவனுடைய வாலும் வரவர நீண்டுகொண்டே வர்தது. குரங்குகள் விசேஷமாக விரும்பித் தின்னும் பூவம்பழங்களும், பட்டாணியும் அனந்தராமனுக்கு ரொம்பப் பிடித்தம். இதை அறிந்த அவன் அப்பா அகோரம் அடிக்கடி அவற்றை அவன் முன்பு ஆசை காட்டிப் படிக்கவோ எழுதவோ தூண்டுவார்.

செல்லப் பிள்ளையாக வளர்ந்த அவன் தன் பாட்டியாரிடத்தில் கொஞ்சி விளையாடிக்கொண்டு அவள் பொழுதுபோக்குக்காகச் சொல்லும் ராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய கதைகளையும் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தான். அப்பா வேலைக்குப் போன பிறகு அனந்தராமனும் வெளியே எல்லாவிடங்களிலும் சுற்றித் திரிந்துவிட்டு, சோற்று வேளைக்கு வீட்டுக்குத் திரும்புவான்.

மாங்காய்களைக் கல்லால் அடிப்பதாயும், வாழைக்காய்களைப் பிய்த்துக்கொண்டு போய்விடுவதாகவும் அனந்தராமனைப் பற்றியும், அவன் தோழர்களைப்பற்றியும் ஓயாமல் அகோரத்துக்குப் புகார்கள் வந்த வண்ணமிருக்கும். தன்

பையன் கெட்டு அலைவதுடனின்றி, ஊர்ப்பிள்ளைகளை வேறு அவன் உருப்படாமல் அடிப்பதாகப் பேச்சுக்கள் கிளம்பவே அகோரத்துக்குப் பொறுக்க முடியாமல் போய்விட்டது. நயமாகச் சொன்னார்; பயமுறுத்திப் பார்த்தார்; திட்டினார்; இறுதியில் தடிபடிப் பிரயோகத்திலும் இறங்கினார். இவை எதனாலும் அனந்தராமனை வளைக்க முடியவில்லை.

பத்துப் பையன்களுடன் கூட்டாகப் பள்ளிக்கூடம் போய் வந்தால்தான் கட்டுப்பாடும், நல்ல பழக்கமும் வருமென்று அகோரத்தின் நண்பர்கள் ஓயாமல் சொன்னதன் பேரில் அவனை ஸ்கூலில் சேர்ப்பதில் அவர் தீவிரமாயிருந்தார். இந்தச் சமயத்தில்தான் பக்கத்து ஊரில் நடுத்தரப் பாடசாலை ஒன்று நடந்து வருவது அவருக்கு நினைவுக்கு வந்தது. அந்தப் பள்ளிக்கூடம் மிகவும் கெடுபிடியான முறையில் நடத்தப்பட்டு வந்தது. நல்ல யோக்கியதை, அறிவு திறமை முதலிய சிறப்புக்களைக்கொண்ட மாணவர்களையே அங்கே சேர்த்துக்கொள்வார்கள். அனந்தராமனை அங்கே எப்படிச் சோக்க முடியும்? எதற்கும் இதில் போய் ஒரு தடவை முயற்சி செய்யலாம் என்று எண்ணிய அகோரம், அனந்தராமனை நல்ல வார்த்தைகளைச் சொல்லி, உற்சாகப்படுத்திக் கூடவே அழைத்துக் கொண்டு போனார்.



புதிய இடம் என்பதாலும், அப்பாவும் கூடவே நிற்கிறார் என்பதாலும் அனந்தராமன் அடக்கமாகவும், சாது மாதிரியும் நின்று கொண்டிருந்தான். பள்ளிக்கூடத்தில் வீற்றிருந்த மற்றப் பிள்ளைகளை ஒரு முறை ஜாடையாகக் கவனித்துக்கொண்டான். எல்லாரும் அட்டை, காகிதம் இவற்றை ஏந்தியவாறு உட்கார்ந்திருந்தார்கள்.

தலைமை ஆசிரியர் அங்கே வந்து சேர்ந்தார். சிறு பையன்களுடன் நின்றுகொண்டிருந்த அகோரத்தைப் பார்த்து, "என்ன செய்ய வேண்டும்? அட்மிஷனா?" என்றார். "ஆமாம்! இவன் தான் பையன். இவனை முதல் பாரத்தில் சேர்க்க வேண்டும். வீட்டிலேயே எல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறது. தயவு செய்து...." என்று அகோரம் தலைமை ஆசிரியருக்கு இரக்கம் வரும்படியாகப் பேசினார்.



யிருக்கும்?' என்பதுபோலப் பையன்களின் பொது அறிவைச் சோதித்தறிவதற்காக வினக்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

ஊர் சுற்றி அலைந்து, அக்கப்போர் அளந்து, பெரிய அரட்டை என்று பெயர் பெற்றிருந்த அனந்தராமன் யோசித்து யோசித்துக் கேள்விகளுக்கெல்லாம் பதில் எழுதினன். மளமள வென்று அவன் எழுதுவதைப் பார்த்து மற்றப் பையன்களெல்லாம் விழித்துக்கொண்டிருந்தார்கள். விடை தெரியாமல் திணறிக்கொண்டிருந்த பிள்ளைகளைப் பார்ப்பது அனந்தராமனுக்குப் பரிதாபமாக விருந்தது. அவன் பாக்கியாக எழுத வேண்டியிருந்த கேள்வி ஒன்றுதான். "ராமன் வீட்டுச் சேவல் கிருஷ்ணன் வீட்டில் முட்டையிட்டுவிட்டது. முட்டை யாருக்குச் சொந்தம்?" என்ற கேள்விக்கு அவன் இன்னும் பதில் எழுதவில்லை. அதை எழுதாமல் விடுவதற்கும் இஷ்டமில்லை.

"சரி, இங்கே பையன்களைப் பரீட்சை செய்வோம். அதை இன்ஸ்பெக்டர் பார்ப்பார். அவன் வெற்றி பெற்றதாக அவர் தெரிவித்த பிறகுதான் பிள்ளைகளை இங்கே சேர்க்கிறோம். உங்கள் பையனும் பரீட்சை எழுதட்டும்" என்றார் தலைமை ஆசிரியர்.

ஜாக்கிரதையாகப் பரீட்சை எழுதும்படி பையனிடம் சொல்லிவிட்டு அகோரம் வீட்டுக்குப் போனர்.

அனந்தராமனிடம் கேள்வித்தாளைக் கொடுத்தார்கள். அதில் பத்துக் கேள்விகள் இருந்தன. 'ஒரு வீசை இரும்பும், ஒரு வீசை பஞ்சும் இருக்கின்றன. எடை போட்டால் எது அதிகப் பளுவுள்ளதா

'அப்பா எவ்வளவோ ஸ்கூலுக்கு அழைத்துப் போய்வந்தார். அங்கே எல்லாம் இப்படிக் கேள்விகள் கேட்கவில்லை. இங்கே மட்டும் என்னவாம்? இந்தக் கேள்வி மாதிரிதானே படிப்பும் சொல்லிக் கொடுப்பார்கள்! இதற்குப் பதிலாக, போகாமலேயே இருந்துவிட்டு அடுத்த வருஷம் பார்த்துக் கொண்டால் போகிறது' என்று அவனுக்குத் தோன்றியது. உடனே அந்தக் கேள்விக்குப் பின்வருமாறு பதில் எழுதினன்:

"இது ஓர் அசட்டுக் கேள்வி. மாணவர்களுடைய பொது அறிவைச் சோதித்துப் பார்ப்பதற்கு

முன்னதாக, இதைப் போன்ற கேள்விகளைத் தயாரிப்பவர்களைச் சோதித்துப் பார்ப்பது, அவசியமில்லையா?''

பிள்ளைகளின் விடைப் பத்திரங்களை எல்லாம் சேர்த்து மேல் அதிகாரிகள் உத்தரவுப்படி இன்ஸ்பெக்டருக்கு அனுப்பினார் தலைமை ஆசிரியர். இன்ஸ்பெக்டர் விடைகளையெல்லாம் திருத்தினார். தப்பும் தவறுமாக அநேகர் விடை எழுதியிருந்தார்கள். நடுவில் அனந்தராமனின் விடைத்தாள் அவர் கையில் அகப்பட்டது. கூடிய வரையில் சுமாராகப் பதில்கள் எழுதப் பட்டிருந்தன. கடைசிப் பக்கத்தைப் புரட்டியபோது இன்ஸ்பெக்டர் திகைத்தே விட்டார். பொது அறிவுப் பரீட்சை என்று அசட்டுத்தனமான கேள்விகள் கேட்கப்படுவதைச் 'சுருக்' என்று சுட்டிக் காட்டியிருந்த மாணவன் மீது அவருக்குக் கோபம் ஏற்படவில்லை. அனந்தராமனின் புத்திகூர்மையை அவர் மெச்சிக்கொண்டார்.

மறுநாள் தலைமை ஆசிரியருக்கும், அகோரத்துக்கும் தனித்தனியாக இரு கடிதங்கள் வந்தன.

தம்மை உடனே வந்து காண வேண்டுமென்றும், அவசரம் என்றும் அந்தக் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அகோரம் சற்றும் எதிர்பாராத நிலைமையில் இந்தக் கடிதம் வரவே, அனந்தராமன் ஏதோ அனர்த்தமாகச் செய்துவிட்டான் என்று முடிவு கட்டி மனம் வருந்தினார். இருந்தாலும் விஷயம் என்னவென்பதை அறிந்து வருவோம் என்று இன்ஸ்பெக்டரிடம் போய்ச் சேர்ந்தார். அங்கே போனதும் இன்ஸ்பெக்டர் சிடுசிடு என்றிருந்ததைப் பார்த்த அகோரத்துக்கு மனது 'பக் பக்' என்று அடித்துக்கொண்டது. இன்ஸ்பெக்டர் நிமிர்ந்ததும் அவர் எதிரே அகோரம் தென்பட்டார். தான் யார் என்பதை அகோரம் தெரிவித்ததன் பேரில் இன்ஸ்பெக்டர் முகம் மாறுதலடைந்தது.

"உங்கள் பையன்தானா அந்த அனந்தராமன்? ரொம்ப துஷ்டப் பிள்ளையோ? வீட்டில் அவனைச் சரிவரக் கவனித்துக்கொண்டு தானே வருகிறீர்கள்?'' என்றெல்லாம் இன்ஸ்பெக்டர் கேள்விகளை அடுக்கவே, அகோரத்துக்கு எல்லா நாடியும் விழுந்துவிட்டன. அசட்டு விழியோடு பேசாமல் நின்றார்.

"ஒன்றுமில்லை. அவன் ரொம்ப நன்றாக முன்னுக்கு வரவேண்டியவன். படிக்காமல் இருந்துவிட உபாயம் செய்திருக்கிறான். நாளையே அவனை அந்தப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளும்படி எழுதியிருக்கிறேன்!'' என்று ஒரு கவரை நீட்டினார் இன்ஸ்பெக்டர். அகோரத்துக்குப் போன உயிர் திரும்பியது. பிறகு பையன் எழுதிவைத்த பதில் இன்னதென்பதையும் இன்ஸ்பெக்டர் மூலம் தெரிந்துகொண்டார். அனந்தராமனுக்கு இது பெரிய ஏமாற்றமாகத்தான் இருந்தது. ஆனால் துடுக்குத்தனம் நிறைந்த அவன் படிப்பிலும் துடியாகி, இப்போது 'ஸ்காலர்ஷிப்' பெற்று ஹைஸ்கூலில் படித்து வருகிறான்.

நடுத்தரப் பாடசாலையிலும் அந்த வருஷத்துக்குப் பிறகு, பொது அறிவுக் கேள்விகள் வேறு விதமாக மாறின.

எங்கள் பகுதி

* திலகர் தின இதழ்

1-8-'54 'கண்ணன்' அட்டைச் சித்திரம் சோபிக்கவில்லை.

'கேட்டீர்களா!' பயனுள்ள பகுதி. செய்திகளைத் தொகுத்திருப்பது உபயோகமாக உள்ளது.

'அன்பான நண்பனை ஆபத்தில் அறி' என்பார்கள்; 'லீடர் மணி' அதற்கு ஓர் எடுத்துக்காட்டே போல் சிறப்பாக இருக்கிறது.

'பரிசு' என்ற கதையை நீங்கள் படித்தீர்களா? 'முறத்தடி பட்டாலும் முகத்தடி படக்கூடாது' என்பது பழமொழி; ஆனால், 'வாயாடி' விமலாவுக்கு எதிரில் 'மாணவன்' மணி அவமானமடைவது பரிதாபமாக இருக்கிறது.

இவ்விதழின் சிறப்புக்கே சிகரம் வைத்தாற்போன்றுள்ள 'நினைத்ததும், நடந்ததும்' என்ற புதுமையான ஹாஸ்ய நாடகம், 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் வெளிப்படும்' என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது.

'ஸ்ரீமான் சுதர்சனம்' என்ற சிறிய கதையின் தலைப்புதான் பிரமாதமாக இருக்கிறதே யன்றி, கதை நன்றாகவேயில்லை. 'தன்னை மதியாதார் வீட்டு வாசலை மிதியாதிருப்பதே உத்தமம்' போலும்!

'ராஜன்' கதையைப் படித்ததும், 'தெய்வம் நின்றுகொல்லும்; ஜயராஜ் அன்று கொல்லும்' என்ற முடிவுக்குத்தான் வரலாம்!

'தூங்கும் அழகி'யைப் பார்க்கையில், 'வியாதிக்கு மருந்துண்டு, விதிக்கு மருந்தண்டோ?' என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

'பொன்னாபரணத்தினும், புகழ் ஆபரணமே மேல்' என்று கருதும் வீரம் மிக்க இளைஞர்களைக் கதாநாயகர்களாக்கி, 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்ற அரிய தத்துவத்தைச் சரித்திரக் கதையான 'சந்திரகிரிக்கோட்டை' மூலம் சிறந்த தமிழ்நடையில் எடுத்துக்காட்டும் 'ஜனா' அவர்களுக்கு நன்றி.

விஞ்ஞான விஷயங்களில் கருத்துகொண்டு, சிறுவர்கள் ஆவலுடன் கேட்கும் கேள்விகளுக்குப் பொறுமையாகவும் தெளிவாகவும் விரிவாகவும் பேராசிரியர் விஞ்ஞானம் விடை சொல்கிறார். 'அறிஞர்க்கு அழகு அகத்துணர்ந்து அறிதல்' தானே!

'எங்கள் பகுதி'யில் பரிசு பெற்ற கடிதம் புதுமையாக இருக்கிறது. 'எங்கள் பகுதி'க்கான பக்கங்

* இந்த இரண்டு கடிதங்களுக்கும் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

களைத் தயவுசெய்து குறைக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். மற்றொரு புதிய பகுதியான 'அருமையான சம்பவம்' 'சர்க்கரைப் பந்தலில் தேன் மாறி பொழிந்தாற்போல்' இருக்கிறது.

[பின் குறிப்பு:—'சுதந்தரம் என் பிறப்புரிமை' என வீறுகொண்டு கர்ஜித்த தியாகி திலகர் தினத்தன்று வெளிவந்துள்ள இவ்விதழும் சிறப்பாக இருப்பதில் என்ன ஆச்சரியம்? 'மனம் இருந்தால் மலையும் சாயும்' ஐயா!]

—தே. பார்த்தசாரதி, சென்னை-4.

* எல்லாம் கண்ணனே!

1-8-'54 கண்ணன் இதழ் கண்டேன். பாவனையுடன் விளங்குகிறது அட்டைப் படம். 'ஹை ஜம்ப்' தாண்டும் அந்தச் சிறுவனின் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி!

கண்ணன் எதிலும் இளைத்தவனல்லன்' என்பதைக் "கேட்டீர்களா?" என்றத் துண்டுப் பகுதி கூடத் தெள்ளெனக் கூறுகிறது. "சீட்டுப் பைத்தியம்" துணுக்கு மிக நன்றாயிருக்கிறது. புது இடத்தில், புதிய சூழ்நிலையில், 'லீடர் மணி' தன் வாழ்க்கையையும் படிப்பையும் தொடர்ந்து நடத்தப் படும் பாட்டை 'ஆர்வி' அவர்கள் வர்ணிக்கும் விதமே அருமையானது! 'பரிசு' அளிப்பதில் மாணவர்களும், மாணவிகளும் போட்டியிடுவதை குமார் நகைச் சுவை ததும்ப எழுதியுள்ளார்.

'நினைத்ததும் நடந்ததும்' நாடகம் எழுதிய 'ஸ்ரீநிவாஸ்' உண்மையில் வெற்றியே கண்டிருக்கிறார். ஏனெனில், "தாம் எழுதியது பிரசுரமாக வேண்டும்" என்று அவர் 'நினைத்தது' அப்படியே 'நடந்து' விட்டதல்லவா? நாடகம் வெகு ஜோர்! 'மாம்பழக் கூடை' கணக்குக் கதை புதுமையானது. 'ஏரிக்கரையில்' நின்றபடியே ஜயராஜ் கள்ளனைக் கண்டு பிடித்து விட்டாரே! பிச்சுவான 'ஸ்ரீமான் சுதர்சன'த்தை நினைக்குந்தோறும் நம்முள்ளே ஒரு நகையொலிதான் எழுகிறது.

'தூங்கும் அழகி' வழக்கம் போல, நேரான பாதையில் நிமிர்ந்த நடையோடு கம்பீரமாகச் செல்கிறாள். கதை மிகச் சிக்கலான, சுவாரஸ்யமான கட்டத்தை அடைந்துள்ளது. மற்றும் 'ஜஞ' அவர்கள் "ஜாம், ஜாம்" என்று நம்மையும் அழைத்துக்கொண்டு 'சந்திரகிரிக் கோட்டை'க்குள் முன்னேறுகிறார். 'கேளுங்கள், சொல்கிறேன்' பகுதியில் பயனுள்ள கேள்விகளும் கருத்துள்ள விடைகளும் உள்ளன. 'பேராசிரியர் விஞ்ஞானம்' அவர்களுக்கு நமது சபாஷ்!

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல் அமைந்துள்ளது, 'எங்கள் பகுதி' விமரிசனங்கள்.. ஆகா! விமரிசனங்களா அவை? ஒவ்வொன்றும் ஒவ்வொரு சொல்லோவியம்! பாரதியாரின் கண்களுக்குக் கண்ணபிரான் காதலியாய், காதலனாய், குழவியாய், தோழனாய், சேவகனாய், ஞான குருவாய்க் காட்சியளித்தார். அதுபோலவே ஒவ்வொரு கண்ணன் இதழும் எங்களுக்கு அறிவளிக்கும் ஆசான், இளிய பெற்றோர், அருமைச் சகோதரர், நட்புத் தோழன் ஆகிய எல்லாமாய்க் காட்சியளிக்கிறது.

—D. ராஜேஸ்வரி, சென்னை-2.

உழைத்த பணம்

தம்பி

இது உண்மையில் நடந்தது:

நேற்று மாலை சுமார் நாலு மணி இருக்கும். சிற்றுண்டி சாப்பிட ஹோட்டலுக்குப் போனேன். காலணாவுக்குச் சாப்பிட்டேன்; சர்வர் 'பில்' கொடுத்து விட்டான்.

அப்போது என் நண்பன் ஒருவன் அங்கே வந்தான். அவனும் ஏதோ சாப்பிட்டான். அவன் சாப்பிடும்வரை அவன்கூட நான் பேசிக்கொண்டிருந்தேன். சர்வர் அவனிடம் மூன்றணாவுக்குப் 'பில்' கொடுத்தான்.

பணம் கொடுக்கவேண்டிய மேஜை அருகே வந்து எங்களிடமிருந்த பில் இரண்டையும் கணக்குப்பிள்ளையிடம் கொடுத்தோம். பிறகு நாங்கள் இருவரும் சிறிது விவாதம் செய்தோம், யார் பணம் கொடுப்பது என்று.

கடைசியில் நான் ஒரு ரூபாயைக் கணக்கப்பிள்ளையிடம் கொடுத்தேன்; அவர் தந்த மீதிச் சில்லறையை வாங்கிக் கையில் குலுக்கிக்கொண்டே வெளியே வந்தேன். அப்போது நண்பன் சுவாரஸ்யமான ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான்; நான் அதிலேயே கவனமாயிருந்தேன்.

சுமார் அரை மணி நேரங்கழித்துக் கையிலிருந்த பணத்தைக் கவனித்தேன். பதிமூன்றணா இருந்தது. முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு ரூபாயில் ஏழணா ஹோட்டலுக்குக் கொடுத்த பின் மீதி பதிமூன்றணாவா? எப்படி?

பிறகுதான் நினைவுக்கு வந்தது: ஹோட்டல் கணக்கப்பிள்ளையிடம் நான்கணா பில், மூன்றணா பில் இரண்டு கொடுத்தேனே, அதில் ஒன்றுக்குத்தான் அவர் பணம் எடுத்துக்கொண்டிருக்கிறார்; நாலணாவைக் கோட்டை விட்டுவிட்டார் என்பதை உணர்ந்தேன்.

'கையிலே பணமுடை, நாலணா என்றால் சும்மாவா? எத்தனையோ செலவுக்கு ஆகுமே. இன்று நமக்கு நாலணா லாபம்' என்று ஒரு நிமிஷம் எண்ணினேன். அடுத்த கணம், 'சீச்சீ! இது தவறு. மற்றொருவர் பணம் நமக்கு எதற்கு? நேர்மையில்லாமல் ஒரு தம்படி கூட நமக்கு வர வேண்டாம்' என்ற எண்ணங்கள் எழுந்தன.

நேரே ஹோட்டலுக்குப் போனேன், கணக்கப்பிள்ளையிடம் விஷயத்தை விளக்கி, நாலணாவை அவரிடம் கொடுத்தேன். அவருக்கும் தம் தவறு நினைவுக்கு வந்தது. "ஆமாம், ஆமாம். நீங்கள் இரண்டு பேர் இரண்டு பில் வைத்தீர்கள், இல்லையா? நான் பணம் வாங்கு முன்னேயே ஒன்றை அவசரமாகக் கம்பியில் குத்திவிட்டேன், இப்போது நினைவுக்கு வருகிறது" என்றார்.

பிறகு, "தம்பி, இது நல்ல பணம்; உழைத்த பணம். அதனால்தான்

நான் தவறவிட்டும் அது என்னைத் தேடி வந்திருக்கிறது'' என்று சொன்னார்; நான் உண்மையாக நடந்துகொண்டதற்குப் பாராட்டினார்.

*   *   *

மாலை ஏழு மணி இருக்கும். நான் தபாலாபீசுக்குப் போய் காலணாவுக்கு நாலு கார்டுகளும் ஓரணாத் தபால் தலையும் வாங்கினேன். (எங்கள் ஊர்த் தபாலாபீஸ் இரவு ஏழு மணிக்குக் கூடத் திறந்திருக்கும்.) கார்டுகளை ஜன்னல் பக்கத்தில் வைத்து விட்டு, நான் கொண்டுபோன கடித உறையில் தபால் தலையை ஒட்டினேன். பிறகு கடைத் தெரு வழியே நடக்கத் தொடங்கினேன்.

ஒரு பத்திரிகைக் கடையில் பத்திரிகை வாங்க நினைத்தேன். பைக்குள் கைவிட்டுக் காசு எடுத்தேன். அப்போது அங்கே தபால் கார்டுகள் இல்லாததை உணர்ந்தேன். சற்று முன் வாங்கிய கார்டுகள் எங்கே போயிருக்கும்? சட்டென்று நினைவுக்கு வந்தது: நான் தபாலாபீஸ் ஜன்னலில் வைத்த கார்டுகளை மீண்டும் எடுக்கவே இல்லை!

பதினைந்து இருபது நிமிஷ நேரம் ஆகிறதே, இன்னும் அவை அங்கே, வைத்தபடி இருக்குமா? 'எத்தனையோ பேர் அங்கே வருவார்கள், போவார்கள்; யார் கண்ணிலாவது பட்டு அவர்கள் எடுத்திருப்பார்கள். நமக்கு எங்கே கிடைக்கப் போகிறது? இந்த நஷ்டம் ஞாபகமறதிக்குத் தகுந்த தண்டனைதான்' என்றெல்லாம் நினைத்தேன்.

இருந்தாலும் ஓர் ஆசை, அங்கே போய்த்தான் பார்ப்போமே என்று. வெகு வேகமாக நடந்தேன். தபாலாபீஸ் ஜன்னலண்டை வந்துதான் நின்றேன். அங்கே அந்தக் கார்டுகள்..இ..ல்..லை!

காற்றில் கீழே விழுந்திருக்குமோ என்று பார்த்தேன். இல்லை. அங்கிருந்த குமாஸ்தாவிடம், ''சற்று முன் இங்கே நாலு கார்டுகளை மறந்து வைத்துவிட்டேன், பார்த்தீர்களா?'' என்று கேட்டேன்.

"எனக்குத் தெரியாதே!" என்றார் அவர்.

"எழுதிய கார்டா எழுதாத கார்டா?" என்று ஒருவர் கேட்டார். திரும்பிப் பார்த்தேன். கேள்வி கேட்டவர் குனிந்தபடி ஒரு கார்டில் மும்முரமாகக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தார்!

நான், "எழுதாதவைதான்" என்று அலட்சியமாகச் சொன்னேன். 'இனி இங்கிருந்தால் இப்படி நாலு பேர் பரிகாசம் செய்வார்கள், போனது எங்கே திரும்பக் கிடைக்கப் போகிறது?' என்ற ஏக்கத்துடன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன்.

இந்தப் பேச்சையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த தந்திச் சேவகர் ஒருவர் வெளியே வந்தார். என்னிடம் நான்கு கார்டுகளைக் கொடுத்தபடி, "தம்பி, இந்தா உன் கார்டுகள் கேட்பாரில்லாமல் ஜன்னலில் கிடந்தன. நான் எடுத்து வைத்தேன். உன்னுடையதா? எடுத்துக்கொள்" என்றார்.

ஏதோ பெரும் புதையல் கிடைத்தது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது எனக்கு. "ரொம்பத் தாங்ஸ்" என்றேன் உணர்ச்சியுடன்.

மும்முரமாய்க் கடிதம் எழுதிக்கொண்டிருந்தவர் அதை முடித்து விட்டுத் தபாலில் போட வந்தார். தந்திச் சேவகர் பேச்சைக் கேட்டபடி வந்த அவர், "தம்பி, உன் பணம் நன்கு உழைத்த பணம் போலிருக்கிறது. அது எங்கும் தவறிப் போய்விடாது" என்று உற்சாகமாகச் சொன்னார்.

இப்போதுதான் நான் அவரை நன்றாகக் கவனித்துப் பார்த்தேன். மாலையில் நான் சென்றிருந்த ஹோட்டல் கணக்குப் பிள்ளையேதான் அவர்!

அன்பு

கே. கே. கோமளா

"அம்மா! அம்மா! மணி வந்துவிட்டதா, அம்மா?" என்று கேட்டுக்கொண்டே வந்தான் கண்ணன்.

"பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போதே இந்தக் கவலைதானா? காபி டிபனைச் சாப்பிட்டு விட்டுப் போய் உன் நண்பனைத் தேடிக்கொள்" என்றாள் அம்மா.

"இல்லேம்மா! தினமும் சாயந்தரம் எனக்காகப் பள்ளிக்கூட வாசலில் காத்திருக்கும் மணி இன்று வரவேயில்லை அம்மா!" என்று கவலையுடன் கூறினான் கண்ணன்.

"அது எங்கே போயிருக்கிறதோ, யார் கண்டார்கள்?" என்று கூறியபடி டிபனைத் தந்தாள் அம்மா.

அப்பொழுது கூடத்திலிருந்து 'லொள்! லொள்' என்ற சப்தம் கேட்டதும் கண்ணன் துள்ளி எழுந்தான். "அம்மா! அம்மா! டம்ளரில் பால் கொடம்மா. அதோ மணி வந்துவிட்டான்," என்று அவசரப்படுத்தினான்.

பாலைத் தட்டில் ஊற்றி எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். அங்கு அவன் வரவையே எதிர்பார்த்துக்கொண்டு மணி காத்துக் கொண்டிருந்தது.

"எண்டா தடியா! இவ்வளவு நேரமாக எங்கே சுற்றிக்கொண்டிருந்தாய்? வீட்டோடு கிடப்பதற்கு என்ன? அப்பா தான் ஊரிலில்லையே!" என அதைச் செல்லமாகக் கடிந்தவண்ணம் அதனருகில் பால் தட்டை வைத்தான். அது ஆவலோடு குடிப்பதைப் பரிவு நிறைந்த கண்களால் பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணன்.

கண்ணனும் மணி என்ற அந்த நாயும் நண்பர்களாகிக் கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள்தான் ஆயின. ஆயினும் எத்தனையோ ஆண்டுகளாகப் பழகியவர்களைப் போல் அவ்வளவு அந்நியோந்நியமாயிருந்தனர்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் கண்ணன் பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான். வழியில் ஒரு கூட்டம் கூடியிருந்தது. அங்கே என்ன நடக்கிறது என்று அறியும் ஆவலுடன் அங்கே எட்டிப் பார்த்தான். அங்கே அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. நாலைந்து சிறுவர்களுக்கு மத்தியில் ஒரு சிறு நாய் அகப்பட்டுத் திண்டாடிக்கொண் டிருந்தது. மற்றவர்கள் அவர்களைத் தடுக்காமல் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

வெள்ளைவெளேரென்ற உடலில் அங்கொன்றும் இங்கொன்றும் தூவி விட்ட வர்ணத்தைப் போல் கறுப்புநிறப் புள்ளியும் பழுப்புநிறப் புள்ளியும் அமைந்திருந்த அந்த உயர்ந்த ஜாதி நாய் பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது.

"என்னைக் காப்பாற்ற மாட்டாயா?" என்று தன்னைப் பார்த்து அந்த நாய் பரிதாபமாகக் கெஞ்சுவது போலிருந்தது, கண்ணனுக்கு. உடனே கூட்டத்தை விலக்கிக்கொண்டு, "எங்கள் வீட்டு நாய் இங்கு எப்படி வந்தது? இதை அடிக்க உங்களுக்கு எவ்வளவு தைரியம்? உம்! வாடா மணி!" என்று தைரியமாக அவர்களை அதட்டிவிட்டு அந்த நாயைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு தடவிக்கொடுத்தான். அதுவும் அவனை நன்றி நிறைந்த கண்களோடு நோக்கிற்று.

அதை வீட்டுக்கு எடுத்துப்போய் எங்கே காயம் பட்டிருக்கிறது என்று ஆராய்ந்தான். முன் காலில் நல்ல அடி. அதைக் கழுவி மருந்து வைத்துக் கட்டினான். சிறிது நேரம் இருந்துவிட்டு அந்த நாய் ஓடிவிட்டது.

மறுநாள் மாலை கண்ணன் பாடம் படித்துக்கொண் டிருந்தான். தன் உடல் மேல் ஏதோ உராய்வதை உணர்ந்த கண்ணன், திடுக்கிட்டுத் திரும்பினான். என்ன

ஆச்சரியம்! முதல் நாள் காப்பாற்றிய அதே நாய்தான்!

அது தன் முன் காலைத் தூக்கிக் காட்டியது. அதனுடைய புத்தி கூர்மையை வியந்த கண்ணன் அதற்கு உடனே மருந்து போட்டான். சிறிது நேரம் அங்கே விளையாடிவிட்டு மணி சென்றுவிட்டது. அது முதல் நாள தவருது மாலை நேரத்தில் மணி, கண்ணன் வீட்டிற்கு வர ஆரம்பித்தது. இவ்வாறு ஆரம்பித்த அவர்கள் அன்பு நாளடைவில் நட்பாக மாறி விட்டது.

கண்ணனின் தந்தை ஒரு பெரிய உத்தியோகஸ்தர். அவர் ஒரு மாதத்தில் பாதி நாட்கள் 'ஆபீஸ்' அலுவலாக வெளியூர் சென்று விடுவார். வெளியூரிலிருந்து அன்றுதான் அவர் வந்திருந்தார். கண்ணன் ஒரு நாயோடு விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவருக்கு மகன்மேல் கோபம் வந்தது.

"டேய் கண்ணு! இந்தச் சனியை எங்கே பிடித்தாய்?" என்று கத்தினர். அவர் சிறிது முன் கோபக்காரர்.

"இல்லேப்பா! இது ரொம்ப நல்ல நாய். என்மேல் ஆசையாயிருக்கு. எனக்கும்.."

"அதொன்றும் இங்கே வேண்டாம். நாய், பூனை இவற்றையெல்லாம் வீட்டில் வைத்துக் கொள்வது, எனக்குப் பிடிக்காது என்பது உனக்குத் தெரியாதா?" என்று இரைந்தார், அப்பா.

அதற்குமேல் அவரை எதிர்த்துப் பேச கண்ணனுக்குத் தைரியமில்லை. 'இது வீட்டிலிருந்தால் இவரை என்ன செய்கிறது?' என்று தனக்குள் கூறினன்.

"நீ யோசிப்பது அப்புறமிருக்கட்டும். முதலில் அந்தச் சனியைக் கொண்டுபோய் எங்கேயாவது கண்காணாத இடத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டு வா" என்று கூறிவிட்டுப் போய்விட்டார் அப்பா. கண்களில் துளித்த நீரைத் துடைத்துக்கொண்டு "மணி! இன்னும் பத்து நாளைக்கு இந்தப் பக்கம் வராதே. அப்புறம் அப்பா ஊருக்குப் போய்விடுவார். தாராளமாகப் பிறகு வரலாம்" என்று மெதுவாக அதனிடம் கூறினன்.

மணி ரொம்பப் புரிந்ததுபோல் தலையைப் பலமாக ஆட்டியது.

மறு நாள் காலை கண்ணன் பள்ளிக்குச் சென்ருன். பள்ளிவாசலில் மணி உட்கார்ந்திருந்தது. கண்ணனைப் பார்த்ததும் அது ஓடி வந்து அவன்மேல் தாவியது. வாயில்லாப் பிராணியாகிய அது, தன் மேல் வைத்திருக்கும் அன்பைக் கண்டதும் கண்ணனின் நெஞ்சம் நெகிழ்ந்துவிட்டது.

சிறிது நேரம் அதோடு விளையாடிக்கொண்டிருந்தான். பள்ளிக்கு நேரமாகி விடவே, "மணி! மணியாகிவிட்டது! நீ போ!" என்று கூறி அதை அனுப்பிவிட்டு உள்ளே சென்ருன். மாலையில் பள்ளி விட்டதும் வெளியே வந்த கண்ணன் தனக்காக மணி காத்திருப்பதைப் பார்த்தான். இவ்வாறு அது காலையிலும் மாலையிலும் நண்பனைப் பள்ளி வாசலில் சந்திப்பதன் மூலம் அவர்கள் நட்பு மேலும் பலப்பட்டது. ஒரு வருஷம் இப்படியே சென்றது. மணி இதற்குள் எப்படி வளர்ந்துவிட்டது!

பழக்காரி: இந்த மாம்பழத்தில் என்ன கெடுதல்? பழம் நல்லா இல்லாட்டா இத்தனை புழுக்கள் பழத்தைச் சாப்பிடுமா?

கண்ணனின் தந்தை வெளியூர் சென்றிருக்கும் சமயங்களில் மணி கண்ணனோடு வீட்டிலேயே கிடக்கும்.

இவ்விஷயம் அவன் தந்தை காதில் விழுந்ததும் அவர் அதிகக் கோபமடைந்தார்.

“டேய்! கண்ணா! நான் ஊரில்லாதபொழுதெல்லாம் அந்த நாய் வீட்டோடு கிடக்கிறதாகக் கேள்விப்பட்டேன். இதெல்லாம் என்ன? நான் வேண்டாமென்று சொன்னதை நீ ஏன் அடமாகச் செய்கிறாய்? உம்..!” என்று உறுமினார் அப்பா ஒரு நாள்.

“அப்பா! அது என் மேல் அவ்வளவு அன்பு வைத்திருக்கிறது. அது எனக்காக உயிரைக்கூடக் கொடுத்துவிடும்” என்றான் கண்ணன் பயந்தபடியே.

“அதெல்லாம் எனக்குத் தெரியாது. அது உயிரைத்தான் கொடுக்குமோ; இல்லை, உடலைத்தான் கொடுக்குமோ! அது இனி இங்கே வரக்கூடாது. அப்படி வந்ததோ, அதை நானே பிடித்து நாய் பிடிப்பவர்களிடம் கொடுத்துவிடுவேன். ஜாக்கிரதை!” என்று கண்டிப்பான குரலில் கூறினார்.

நம்மால் மணி அநாவசியமாகத் தொந்தரவுக்குள்ளாகப் போகிறதே என்று மணி அதைப் பார்க்காமலேயே இருந்தான். ஆனால் அதே ஏக்கம் கண்ணனைப் படுக்கையில் தள்ளிவிட்டது. அப்பொழுதும் அவன் தந்தை மசிந்து கொடுக்கவில்லை.

மேலும் ஒரு வாரம் சென்றது. இப்பொழுது கண்ணனுக்கு ஜுரம் குறைந்திருந்தது.

ஒரு நாள் நல்லவெயில். ஆபீஸ் விஷயமாக வெளியே சென்றிருந்த அப்பா வீடு திரும்பிக்கொண்டிருந்தார். தெருத் திருப்பத்தை அடைந்ததும் அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது. தெருக் கோடியில் ஒரு வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. ஜனங்கள் கத்தியவாறு அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தனர். தீயணைக்கும் படை வருவதற்குள் மக்கள் தங்களாலான உதவிகளைச் செய்துகொண்டிருந்தனர்.

தெரு முனையிலேயே இருந்த அவர்கள் வீட்டினுள் நுழைந்த அப்பா அவசரமாகக் கோட்டைக் கழற்றியபடியே, “கண்ணா! கண்ணா!” என்று கூப்பிட்டார்.

அப்பொழுதுதான், தூக்கத்திலிருந்து விழித்த அம்மா, “ஏதோ பாட விஷயமாகப் பேசவேண்டுமென்று ராமு வீட்டிற்குப் போயிருக்கிறான்” என்றாள்.

“எந்த ராமு?” இந்தக் கேள்வி அப்பாவின் வாயிலிருந்து வேகமாக வந்தது.

“ஏன்? கோடி வீட்டு..” அம்மா வாக்கியத்தை முடிப்ப

தற்குள், "ஐயோ! கண்ணு! கண்ணு!" என்று கத்தியவாறு வெளியே ஓடலானார் அப்பா.

தீப் பிடித்த வீட்டிற்குள், "கண்ணு! கண்ணு!" என்று கத்தியவாறு நுழையப்போன அப்பாவை அங்கேயிருந்தவர்கள் இறுகப் பிடித்து நிறுத்தினர்.

"ஐயோ! என்னை விடுங்கள்! என் மகன்! கண்ணு! கண்ணு!" என்று அவர்களிடமிருந்து திமிறினார் அப்பா.

அதற்குள் தீயணைக்கும் படையினர் 'ஆம்புலன்ஸ்' வண்டி எல்லாம் வந்துவிட்டன. அப்பொழுது திடீரென்று கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஒரு பெரிய நாய் உள்ளே வந்தது. அது கண்ணனின் அப்பாவைப் பார்த்தது. அவர், "கண்ணு! கண்ணு!" என்று அலறுவதைப் பார்த்ததும் அதற்கு என்ன தோன்றியதோ, தெரியவில்லை. மற்றவர்கள் எதிர்பாராத சமயம் தீப் பிடித்து எரியும் அந்த வீட்டிற்குள் அது நுழைந்துவிட்டது. அனைவரும், "ஐயோ! நாய்! நாய்!" என்று கத்தினர்.

ஐந்தே நிமிஷங்களில் அந்த நாய் வெளியே வந்தது. தனியாக வரவில்லை. சட்டையின் பட்டியை வாயால் கவ்வியபடி ஒரு சிறுவனை இழுத்து வந்தது. எல்லோரும் அதையே ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"ஐயோ! கண்ணு!" என்று அலறிய வண்ணம் சிறுவனருகில் பாய்ந்தோடினார் அப்பா.

கண்ணனுக்குத் தன்னுணர்வே இல்லை, மயங்கிக் கிடந்தான். மணியும் தீப்புண்களுடன் சோர்ந்து விழுந்துவிட்டது.

அப்பொழுதுதான் அப்பா



தாய்: கார் கிட்டே என்னடா செய்யறே? அப்பா ஆபீஸுக்குப் போற நேரம். கார் கிட்டே போய் விளையாடாதே.

நிமிர்ந்து நோக்கினார். ஆம்! மணியேதான்! எந்த நாயை அவர் வீட்டுப் பக்கமே வரக்கூடாது என்று வெறுத்தாரோ அதே நாய் தான் இன்று அவர் அருமை மகனைக் காப்பாற்றியது. தன் உயிரையே லட்சியம் செய்யாது தன் நண்பனை உயிர்ப்பித்தது.

அவர்களுக்குள் இருந்த நட்பின் ஆழத்தை அறியாது அவர்களைப் பிரிக்க முற்பட்டதை நினைத்து அவர் வருந்தினார்.

சிறிது நேரத்திற்குள் தீ அணைக்கப்பட்டுவிட்டது. காயமடைந்தவர்களை 'ஆம்புலன்ஸில்' ஏற்றியாகிவிட்டது. வண்டியில் மணியையும் எடுத்துப் போக இருவர் வந்தனர்.

அதுவரை பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்த அப்பா, "இல்லை! இல்லை! மணியை நானே கொண்டுபோய் மிருக வைத்தியசாலையில் பார்க்கிறேன்" என்று உணர்ச்சியுடன் கூறியவாறு மயங்கிக் கிடந்த மணியை எடுத்து அணைத்துக்கொண்டார்.

கதை: ஆர்வி

தூங்கும் அழகி

சித்திரம்: ஸாமி

(தொடரும்)

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

[நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் விடை சொல்லவேண்டும் என்பதே பேராசிரியர் விஞ்ஞானத்தின் கருத்து. உங்களை வெறுமே சிரிக்கச் செய்யவேண்டும் என்று விடை சொன்னால், அது பயனுள்ளதாக இராது. உங்களுக்குப் பயன்படவும் வேண்டும்; உங்களைத் திருப்தி செய்யவும் வேண்டும் என்பதே விஞ்ஞானத்தின் நோக்கம். ஆ—ர்]

எம். கைலாசம்,
10, சுப்ரமண்யபுரம், ஸ்ரீரங்கம்.

கெட்ட காற்றைச் சுவாசிப்பதால் என்னென்ன வியாதிகள் ஏற்படும்?

கெட்ட காற்றைச் சுவாசித்தால் நுரை ஈரல் புண்ணாகும். ஆதலால், உடலுக்கு வியாதிகளைத் தடுக்கும் சக்தி குறையும். ஆகையால், பலக் குறைவினால் ஏற்படும் வியாதிகள் உண்டாகலாம்.

எஸ். பூபாலன், ஆடுதுறை.

நான் ஐந்தாம் படிவம் படித்திருக்கிறேன். தற்பொழுது என் வயது 15. எனது உயரம் 4 அடி 4 அங்குலம்தான். ஆகையால், நான் உயரமாக இன்னும் அதிகம் வளருவதற்கு என்ன செய்ய வேண்டும்?

நீந்துதல், சைக்கிளில் 'ஸீட்டை'க் கொஞ்சம் கூட உயர்த்தி வைத்துக்கொண்டு ஓட்டுதல், "ஸ்விங்" விளையாடுதல்-இவ்வகையான உடல் பயிற்சிகள் ஒருகால் உதவலாம்.

கண்ணன்,
வேலூர், வயது 10.

என் வீட்டில் கத்திரிக்காய் சாப்பிடுகிறார்கள். நான் சாப்பிடுவதில்லை. என் என்றால் என் பாட்டி அது சாப்பிட்டால் பாவம் என்று கூறுகிறாள். அது உண்மையா?

இல்லை. கத்திரிக்காயும் மற்றக் கறிகாய் கிழங்கு வகைகளைப் போல், தாவர வர்க்கத்தைச் சேர்ந்தது. இறைச்சி, மீன் முதலிய உணவுகள் உயிரைக் கொன்றே கிடைப்பதால், அவ்வகை உணவுகளை உண்பது பாவம் என்று சிலர் எண்ணுகிறார்கள். தாவர வர்க்கத்துக்கும் உயிர் உண்டு என்றாலும், அவ்வகையைச் சேர்ந்த உணவுகளை உண்பது பாவம் என்று ஒருவரும் சொல்வதில்லை.

என் தம்பிக்கு வயது மூன்று ஆகிறது. அவன் பேசவில்லை, நடக்கவில்லை, ஏன்?

இதற்கு ஒரு பொதுவான பதில் சொல்ல முடியாது. தக்க வைத்தியரிடம் போய்க் காட்டினால் அவர் வேண்டியதைச் செய்வார். எளிய காரணமாக இருந்தால், உனக்கு விளங்கும்படி சொன்னாலும் சொல்லுவார்.

கே. பானுமதி, கோவை.

என் தம்பி எப்பொழுதும் விரல் சப்புகிறான். இதைத் தடுக்க வழி என்ன?

வேப்பெண்ணெயைக் கைவிரல்களில் தடவவும். தடவினால் வாயில் விரலைப் போட்டுக் கொள்ளும்போது, மிகவும் கசப்பாக இருக்கும். இந்தக் கெட்ட வழக்கம் விரைவில் நின்றுவிடும்.

கே. சதாசிவம், மதுரை.

ஆகாயம் எங்கே முடிவடைகிறது? ஆகாயம் என்பது என்ன? எதனால் ஆகியது? ஆகாயத்திலுள்ளே இருப்பது என்ன?

ஒரு திறந்த வெளியில் நின்றுகொண்டு உயர நோக்கினால், தலைக்கு உயரே நாலு பக்கமும் நீல விதானம் ஒன்று விரித்திருப்பது போல் தோன்றுகிறது. இதையே நாம் ஆகாயம் என்று சொல்கிறோம்.

நம்முடைய தலைக்கு உயரே இருப்பது வாயுமண்டலம். அதாவது பூமியைச் சுற்றியிருக்கும் காற்றால் அமைந்த பகுதி. காற்று என்பது கண்ணுக்குத் தெரியாத பொருளாயிற்றே. ஆகையால் நமக்குத் தலைமேல் இருப்பதாகத் தெரிவது என்ன? பகல் நேரத்தில் சூரியன் வீசும் கிரணங்கள் வாயு மண்டலத்திலுள்ள மூலக் கூறுகளின் (Molecules) மேலே பட்டுச் சிதறிப் போகின்றன. கட்டித் தரையின் மீது ஒரு கண்ணாடித் துண்டை வேகமாக எறிந்தால், அந்தக் கண்ணாடி நூற்றுக் கணக்கான துண்டுகளாக உடைந்து போகும்; அந்தத் துண்டுகளும் நாலு பக்கமும் சிதறி வீசும். இதைப் போன்ற நிகழ்ச்சியே வாயுவின் மூலக் கூறுகளின்மீது ஒளிக்கிரகணம் மோதும்போது நிகழ்கிறது.

வெள்ளை நிறமான ஒளியானது வெவ்வேறு நிறமான ஏழு வகைக் கிரணங்களால் அமைந்துள்ளது என்று உனக்குத் தெரியும். இவைகளில் சிவப்பு நிறக் கிரணங்களை விட நீல நிறக் கிரணங்களே அதிகமாகச் சிதறி நாலு பக்கமும் வீசுகின்றன. ஆதலால், சிதறிய ஒளியில் சிவப்பு முதலிய நிறக் கிரணங்களைக் காட்டிலும் நீல நிறக் கிரணங்களே அதிகமாக இருக்கின்றன. வாயு மண்டலத்திலிருந்து இந்தச் சிதறிய ஒளியே நமது கண்களை வந்து அடைகிறது. ஆகையால் ஆகாயம் நீல நிறம் உள்ளதாகத் தோன்றுகிறது.

கண்ணாடியில் நம்முடைய முகத்தைப் பார்க்கும்போது உண்மையாக இல்லாத ஒரு மாய பிம்பத்தையே நாம் காண்கிறோம். அதைப் போலவே நீல நிறமான ஆகாயத்தை நாம் பார்க்கும் போது, உண்மையாக இல்லாத ஒரு மாயக் காட்சியே நமது கண்ணுக்குத் தெரிகிறது.

ஒளிக் கிரணங்களைச் சிதறும் வாயு மண்டலப் பகுதியையே நாம் ஆகாயம் என்கிறோம். ஆதலால் வாயு மண்டலத்துக்கு அப்பால் ஆகாயம் தோன்றாது.

கொ. திருமால்,
வயது 12.

ஹைட்ரஜன் குண்டு எவ்வாறு செய்கிறார்கள்? அவைகளை ஆபத்து இன்றி எவ்வாறு வைத்திருக்கிறார்கள்?

ஹைட்ரஜன் குண்டை எப்படி இயற்றுவது என்பதைப் பரம ரகசியமாக வைத்து வருகிறார்கள்.

ஆகையால், இதை எப்படிச் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், ஹைட்ரஜன் குண்டைப் பற்றிச் சில செய்திகளை ஊகித்துச் சொல்ல முடியும்.

ஹைட்ரஜன் குண்டு அணுக் குண்டை விட அளவில் பெரியது. அணுக் குண்டை விடச் சக்தி மிகுந்தது. அணுக் குண்டினால் வெடிக்கப் படுவது, அதிலுள்ள வெடி மருந்து இயற்கை அறியாத 'டிரைடியம்' என்பதாக இருக்க லாம் என்று சிலர் கருதுகிறார்கள். டிரைடியம் என்பது 'ஹைட் ரஜன் 3' என்னும் பொருளுக்கு இடப்பட்ட பெயர்.

அணுக்குண்டு வெடிக்கும்போது உண்டாகும் வெப்பத்தைப் போன்ற வெப்பம் இல்லா விட்டால், ஹைட்ரஜன் குண்டு வெடிக் காது. ஆகையால் அதை வைத் திருப்பதில் ஆபத்து இல்லை.

வ. நாகராஜன், சேலம்.

நம் உடலில் அதிகமாக எந்தப் பொருள்கள் இருக்கின்றன?

நம்முடைய உடலில் மிகவும் அதிகமாக உள்ள பொருள் நீர். அது 65% என்று கணக்கிட்டிருக் கிறார்கள்.

எம். பாண்டித்துரை,
பாலசமுத்திரம்.

அமெரிக்காவிலுள்ள நயாகரா நீர்வீழ்ச்சியின் உண்மையான உய ரம் என்ன?

வட அமெரிக்காவிலுள்ள நயா கரா நீர்வீழ்ச்சி இரண்டு பகுதி களாகப் பிரிந்திருக்கிறது. அதில் ஒரு பகுதி குதிரை லாட வடிவ மானது. இது கானடா நாட்டைச் சேர்ந்தது. இதன் உயரம் 155 அடி. மற்றொரு பகுதி யுனைடெட் ஸ்டேட்டில் உள்ளது. இதன் உய ரம் 165 அடி.

ஜெ. பி. ஜெஸன், சென்னை.

வெள்ளி, கறை படாத எஃகு, இந்தத் தட்டுக்களில் முகத்தைப் பார்த்தால் மேல் பக்கம் சிறிய தாயும், அடிப் பக்கம் பெரியதாயும் முகம் தெரியக் காரணம் என்ன?

பள பளப்பான ஒரு சம தளப் பரப்பின் முன் ஒரு பொருளை வைத்தால், அந்தப் பொருளைக் கிட்ட வைத்தாலும் தூர வைத் தாலும், எங்கே வைத்தாலும் அதில் தோன்றும் பிம்பம் பொரு ளின் அளவுள்ளதாகவே இருக்கும். ஆனால் வளைவான தளங்களினால் அமைந்து தோன்றும் பிம்ப மானது பொருளைக்காட்டிலும் பெரிதாகவோ, சிறிதாகவோ இருக்கக்கூடும். இவ்வகையான பிரதிபலிக்கும் பரப்புகளிலிருந்து எவ்வளவு தூரத்தில் பொருள் இருக்கிறதோ, அதற்கு ஏற்றபடி அந்தப் பொருளின் பிம்பத்தின் அளவும் மாறுபடும்.

நீ உன் முகத்தைப் பார்த்த தட்டின் மேல்பரப்பு வளைவாக இருந்திருக்க வேண்டும். அதனால் முகத்தின் ஒரு பகுதி தட்டின் அருகிலும் மற்றொன்று தூரத்தி லும் இருக்கும். ஆதலால்தான் ஒரு பக்கம் பெரிதாகவும், மற் றொரு பக்கம் சிறிதாகவும் முகத் தின் பிம்பம் தோன்றுகிறது. அழகான முகங்கள் இவ்வகைத் தளங்களில் விகாரமாகத் தோன்றும்.

சந்திரகிரிக் கோட்டை

"ஜகு"

பஞ்சவர்ணக் கிளிகள் இரண்டும் சொல்லிவைத்தது போல ஆட்டத்தை நிறுத்தி விட்டுக் குள்ளனுடைய கைகளில் போய் உட்கார்ந்துகொண்டன. அவன் அவற்றைக் கூண்டுகளுக்குள் விட்டு விட்டான்.

இப்போது விமலன் ஆட வேண்டிய முறை. காய்கள் இருந்த போக்குப் பிடிபடவே வெகு நேரம் பிடித்தது அவனுக்கு. அமலனும் அதே நிலையில்தான் இருந்தான். "இன்று தொலைந்தோம்! ஆட்டம் திண்டாட்டம் தான்!" என்று அவர்கள் கலங்கித் தவித்தார்கள்.

வெகு நேரம் யோசனை செய்ய விமலனுக்கு அவமானமாக இருந்தது. இரண்டு கிளிகள் அநாயாசமாகச் செய்த காரியத்தைப் பூர்த்தி செய்வது அவ்வளவு சுலபமாக இல்லை. "கிளிகளைவிட நீ சளைத்தவனா?" என்ற கேள்வியைப் பிறர் தன்னைப் பார்த்துக் கேட்பதுபோல் இருந்தது.

ஆகவே அவசர அவசரமாக ஒரு காயை எடுத்துத் தனக்குத் தோன்றியவாறு நகர்த்தி வைத்தான். அமலனும் அதேபோல் சங்கடப்பட்டுக்கொண்டிருந்ததால் அவனும் தனக்குத் தோன்றிய படியே ஒரு காயை நகர்த்தினான். அப்போது ஆட்டம் சம பலத்துடன் இருந்தது.

யோசித்துச் செய்தாலொழிய வெற்றி எளிதல்ல என்ற நிலைமை வரவே இருவரும் வெகு நிதானமாக ஆடத் தொடங்கினார்கள். இருவரும் ஆட்டத்தில் பதிந்த தம் விழிகளை அப்பால் இப்பால் திருப்பாமல் ஆடிக்கொண்டே இருந்தார்கள். ஒரு நாழிகை நேரத்தில் முடிந்து விடும் என்று இருந்த ஆட்டம் முற்பகல் கழிந்தும் முடியும் வழியாக இல்லை.

இந்தச் சமயத்தில் மீண்டும் மணி ஒலித்தது. குள்ளன் முன்

னால் வந்து, "அப்படியே விட்டு விட்டு, ஆகாரம் செய்ய வாருங்கள்!" என்று அவர்களை அழைத்துப்போனான்.

அவர்களுக்கு உணவு கொள்ளவே இல்லை. மனசெல்லாம் ஆட்டத்திலேயே பதிந்திருந்தது. ஏதோ சாப்பிட்டோம் என்று பெயர் செய்துவிட்டு, அவர்கள் மீண்டும் சபாமண்டபத்தை அடைந்தார்கள். கூடியிருந்த ரஸிக மகாஜனங்களும் எழுந்து எழுந்து போவதும், திரும்பத் திரும்ப வருவதுமாக இருந்தார்கள்.

இடை நேரத்துக்குப் பிறகு ஆட்டம் தொடங்கியது. 'நேர்வது நேரட்டும்' என்ற துணிச்சலுடன் சகோதரர்கள் ஆட்டத்தில் முனைந்தனர். வந்து உட்கார்ந்த சற்று நேரத்திலேயே, விமலனுடைய யானை ஒன்று வெட்டுப்பட்டுப் போயிற்று. ஒரு பிழை செய்துவிட்டால் அத்துடன் நின்று விடுகிறதா? மனசில் கலக்கம் ஏற்பட்டுவிடுகிறது. அதனால் நிதானமும் தவறி விடுகிறது. மற்றொரு பிழைக்கு அதுவே காரணமாகிவிடுகிறது. அதேபோல யானை வெட்டுப்பட்ட அடுத்த காயிலேயே குதிரை ஒன்றும் போய்விட்டது.

இத்துடன்கூட ஒட்டகம் ஒன்று மீளமுடியாத நிலையில் அகப்பட்டுக்கொண்டிருந்தது. சதுரங்க ஆட்டத்தைப் பார்த்திருப்பவர்களால்தான் இந்தச் சங்கடமான நிலையை உணர முடியும்.

அமலனின் முகத்தில் நம்பிக்கையின் சாயல் தெரிந்தது. ஒட்டகத்தை வெட்டுவதிலேயே கருத்தாக இருந்த அவன், எந்தக் காயைக் கொண்டு வெட்டுவது என்பதை ஆழ்ந்து யோசிக்கவில்லை. அந்த ஒட்டகத்தை ஒரே சமயத்தில் மூன்று வெவ்வேறு காய்களால் வெட்டி விட முடியும். ஆனால் ஒரு காயைத் தவிர மற்ற இரண்டு காய்களினால் வெட்டினால் அதற்குச் சரியான பலி, பதிலுக்குக் கொடுக்கவேண்டி

யிருக்கும். அகப்பட்ட காயை வெட்டுவதிலேயே குறியாக இருந்த அமலன், முன் யோசனையின்றி வெட்டக்கூடாத காயைக் கொண்டு வெட்டிவிட்டான். அடுத்த கணம்தான் அவனுக்குத் தன்னுடைய பெரும் தவறு தெரிந்தது.

தெரிந்து என்ன பயன்? பாலத்திலிருந்து தண்ணீரில் குதிக்கிறான் ஒருவன். குதித்த பிரகு கீழே அந்த இடத்தில் பாறை நீட்டிக்கொண்டிருப்பது தெரிகிறது. தெரிந்து என்ன உபயோகம்? குதித்தது குதித்ததுதான். அடிபடப் போகிறது என்று குதித்த இடத்திக்குப் பறந்து வந்துவிட முடியுமா? அதே போலத்தான் ஆயிற்று, அவன் யோசியாமலே வெட்டிய லட்சணமும். வெட்டியது வெட்டியதுதான் என்று ஆன மறுகணமே அவனுக்கு முக்கிய பலமாக இருந்த மந்திரி (சிலர் ராணி என்றும் அந்தக் காயை அழைப்பார்கள்) மாட்டிக் கொண்டுவிட்டது.

இருட்டிலே ஒளி தெரிவது போல மந்திரி அகப்பட்டுக் கொண்டவுடன்தான் விமலனுக்கு நம்பிக்கை ஒளி புலப்பட்டது. யானை, குதிரை, ஒட்டகம் எல்லாம் போனால் என்ன? மூன்றையும்விட பலம் வாய்ந்த மந்திரியை வாங்கிவிட்டானே?

அப்புறம் மளமள வென்று ஆட்டம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த ஆட்டத்தில் ஜயிப்போம் என்ற சிறு நம்பிக்கையும் அமலனுக்கு இல்லை. அதனால் இருந்தால் என்ன, போனால் என்ன என்று இருக்கும் வீரர் காய்களை நகர்த்திவந்தான். விமலன் அவனுடைய ராஜாவைக் கட்டுவதிலேயே குறியாக இருந்தான்.

சதுரங்க ஆட்டம் என்பது போர் முனையில் வெற்றி தோல்வி திரும்புவதைப் போலத்

தான். எதிர்பாராத தோல்வியும், எதிர்பார்க்கிற வெற்றியும் போர் வீரர்களின் கையிலா இருக்கின்றன? இல்லை. வேறு எங்கேயோ இருக்கின்றன. ஆனால் மனசு தளரக் கூடாது; புத்தியைச் செலுத்திப் பார்க்கத் தவறக்கூடாது. நிதானமும் சமயோசித சாமர்த்தியமும் போர் செய்பவனுக்கு இருக்க வேண்டும். இருக்கும் சூழ்நிலையில் எதைச் செய்து முடிக்கலாம் என்ற யூகமும் வேண்டும். அப்படி இருந்தால் ஒருகால் நிலையை மாற்றலாம். அப்போதும் வெற்றி தோல்வி அவன் கையில் இல்லை. அவை வேறு எங்கோதான் தெரிந்தும் தெரியாமலும் தலையைக் காட்டிக்கொண்டிருக்கும்.

அமலனின் ராஜா கட்டுக்கு அகப்படாமல் இருக்கத் திணறிய போது, அவனுடைய வீரர் காய் ஒன்று எதிரியின் எல்லையை அடைந்துவிட்டது. அந்த எல்லைக்குப் போய்விட்டால் அந்தக் கட்டத்துக்குரிய காய்க்குத் திரும்பிவர உரிமை உண்டு. இது சதுரங்க ஆட்டத்தின் விதி. அப்படிச் சென்ற வீரர் காய், மந்திரி கட்டத்தைச் சேர்ந்தவுடனே, விமலனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'அமலன் ஒழிந்தான்' என்று இறுமாந்திருந்த சமயத்தில் ஒரு பெரும் பலம் அவனுக்கு வந்துவிட்டதே என்று மனம் ஒடிந்து போனான்.

போர் முனையில் பயந்து, மனம் முறிந்தவன் எங்கேயாவது ஜயிப்பதுண்டா? எதிரி கையைத் தூக்கினாலே அவன் தலை கீழே சாய்ந்து விடுமே!

விமலனுடைய ராஜா கட்டுப் பட்டுவிட்டார். விமலன் அந்த முதல் ஆட்டத்தில் தோல்வியையே அடைந்தான்.

சுற்றியிருக்கும் மகாஜனங்களுக்கு விமலனுடைய வேதனை கொஞ்சமாவது தெரியுமா? அவர்களுக்கு யார் ஜயித்தால் என்ன, யார் தோற்றால் என்ன? விமலனே ஜயித்திருந்தாலும் அவர்கள் பாராட்டத் தயங்கப்போவதில்லை.

சபா மண்டபமே கிடுகிடாய்த்துப் போகும்படி அவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். முதலில் ஜயித்தவன் என்றே அவர்களுக்குத் தெரியவில்லை. இரண்டு பேரில் விமலன் யார், அமலன் யார் என்பது அவர்களுக்குத் தெளிவாக விளங்காததே காரணம். பிறகு குள்ளன் வந்து அமலன் வென்று விட்டதாக அறிவித்ததும் கரகோஷம் பின்னும் வானளாவியது. விமலன்

''திடீர்னு தேனீக்களாப் புடுங்கறதே ஏன்?''

''உங்க தாடிதான் தேன்கூடு மாதிரி இருக்குன்னு அப்பவே சொன்னேனே. அதனால் வழி தவறி எல்லாம் இங்கு வந்துவிட்டன.''

எழுந்து ஓடி விடலாமா என்று அதைரியம் அடையும் அளவுக்கு அந்த முழக்கம் எல்லை கடந்து சென்றது.

அஸ்தமன சமயத்தில் இரண்டாவது ஆட்டம் ஆரம்பமாயிற்று.

குள்ளன் மணியை அடித்து விட்டுக் கிளிக் கூண்டுகளைத் திறந்துவிட்டான். எல்லாம் முதலில் நடந்ததுபோலவே நடந்தது. கிளிகள் இரண்டும் பட்சபாதமின்றி, தயவு தாட்சிண்ணியமின்றி ஆட்டத்தைத் தொடங்கி ஆடின. இருபுறமும் காய்கள் 'கபகப' வென்று சாய்ந்து வீழ்ந்தன. ஆயினும் சமபலமாக இரு பக்கமும் இருக்கும் சமயம் பார்த்து, குள்ளன் மணியை அடித்தான். கிளிகள் இரண்டும் ஆட்டத்தை நிறுத்தி விட்டன. அமலனும் விமலனும் காய்களை நகர்த்தத் தொடங்கினார்கள்.

ஆட்டம் முதல் ஆட்டத்தைப் போலவே நீடிக்கும் போலிருந்தது. இப்போதைக்கு முடியாது என்றே அனைவரும் எண்ணினார்கள். நாளை மீண்டும் இந்த ஆட்டம் தொடரும்; அப்பொழுது வந்து பார்த்துக் கொள்ளலாம் என்று ஜனங்களில் சிலர் எழுந்திருக்கலானார்கள். அவர்களுக்குப் போகவும் மனமில்லை. நிற்கவும் முடியவில்லை. "உட்கார்! உட்கார்!" என்று பின்னுவிருப்பவர்கள் கூச்சலிட்டார்கள்.

இது என்ன ஆச்சரியம்? எப்படி நடந்தது! அமலன் வேண்டுமென்றே விட்டுக் கொடுத்து விட்டானு? அல்லது விமலன்தான் வீறுகொண்டு விட்டானு?

(தொடரும்)

அருமையான சம்பவம்

சென்ற வருஷம் அரைப் பரீட்சை விடுமுறையில் நான் சேலத்திலிருக்கும் என் சித்தி வீட்டிற்குப் போயிருந்தேன். சித்தப்பா ஓர் பள்ளி உபாத்தியாயர். நான் இங்கிருந்து போனதும் பிரயாண அலுப்பினுல் 8 மணிக்கெல்லாம் தூங்கிவிட்டேன். நான் படுத்திருக்கும் கூடத்தை ஒட்டினாற்போல் சிற்றப்பாவின் படுக்கை அறை. 11மணி. சிற்றப்பாவின் படுக்கை அறைக் கதவு சாத்தியிருந்தது. ஆனல், "உம். அடி! கொல்லு! தள்ளு! அடி! விடாதே!" என்று சிற்றப்பாவின் குரல் மட்டும் கேட்டது. நான் எழுந்து சித்தியைத் தேடினேன். சித்தி இல்லை. எனக்குப் பயமாகி விட்டது. சிற்றப்பாவின் அறையில் பாம்பு, தேள் அடிக்கிருர்களோ என்று நினைத்தேன். ஆனல் கதவைத் திறக்கத் தைரியமில்லை. என் மனத்தை நானே திடப்படுத்திக்கொண்டு அறைக்குச் சமீபத்தில் நின்று உற்றுக் கேட்டேன். "அந்தக் கணக்கை அடித்துத் தள்ளு! வருஷம் பூராவும் சொல்லிக் கொடுத்தாலும் மடப் பையன்கள் மண்டையில் ஏறவதே இல்லை" என்ருர் என் சிற்றப்பா. அம்மாடி! ஒரு வழியாக விஷயத்தைப் புரிந்து கொண்டேன். சித்தி இன்டர் படித்தவள். அவள் உதவியைக் கொண்டு சிற்றப்பாவும், சித்தியும் பரீட்சைப் பேப்பர்கள் திருத்துகிருர்கள் என்று அறிந்தேன். நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டே என் படுக்கையில் படுத்தேன்.

—ஆர். ஜலஜா, நாமக்கல்.

உலகம் சுற்றும் ஜெர்மன் இளைஞர்

ஒரு நாள் காலை பத்துமணி இருக்கும். டெலிபோன் மணி கிணு கிணுத்தது. ரிஸீவரைக் கையில் எடுத்ததும் ஒருவர் ஆங்கிலத்தில் பேசினர்.

"ஹலோ, கண்ணன் ஆசிரியரா?"

"ஆமாம்."

"நான் ஜெர்மனியிலிருந்து வருகிறேன். உங்களை எப்போது பார்க்கலாம்?"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என்ன? ஜெர்மனியிலிருந்தா வருகிறீர்கள்? என்னைப் பார்க்கவா வந்திருக்கிறீர்கள்?"

"நான் உலகத்தைச் சைக்கிளிலேயே சுற்றி வருகிறேன். உங்களுடைய ஊருக்கு நேற்றுத்தான் வந்தேன்."

"ஓகோ!"

"இப்போழுதே வரலாமா?"

"வாருங்களேன்!"

ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு அந்த இளைஞரை எதிர்பார்த்திருந்தேன். அவரை என்னவெல்லாம் கேட்கலாம் என்று ஒரு திட்டமும் போட்டுக்கொண்டேன்.

அரைமணிக்கெல்லாம் ஒல்லியாய், உயரமாய், போலோ பனியன் ஒன்றைப் போட்டுக்கொண்டு ஒரு வெள்ளை இளைஞர் உள்ளே நுழைந்தார். அவர்தான் மிஸ்டர் ரெய்னக்.

வந்தவருக்கு உபசாரம் கூறுவதெல்லாம் இல்லையா? அதெல்லாம் முடிந்த பிறகு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். சில கேள்வி பதில்களை மட்டும் இங்கே வெளியிட்டால் போதும் என்று எண்ணுகிறேன். கேள்வியெல்லாம் என்னுடையது. பதில் எல்லாம் அவருடையது.

"கண்ணன் - குழந்தைகளுக்காக நடத்தப்படும் பத்திரிகை என்று எப்படித் தெரிந்துகொண்டீர்கள்?"

"எனக்கு வயது இருபதுகூட நிரம்பவில்லை. நானும் உங்கள் வாசகர்களைப்போல் இளைஞன் தானே? சிறுவர் பத்திரிகை இருக்கிறதா என்று விசாரித்தேன். வேறு எங்கும் போகவில்லை. நேரே உங்களைப் பார்க்க வந்தேன்."

"ஊரைவிட்டு எப்போது புறப்பட்டீர்கள்?"

"1953 ஆகஸ்ட் 19-ஆம் தேதி."

"எப்பொழுது ஊர் திரும்பலாம் என்று உத்தேசம்?"

"1957-ஆம் வருஷ ஆரம்பத்தில்."

"ஒரு நாளைக்கு எத்தனை மைல்வீதம் பிரயாணம் செய்வீர்கள்?"

"90 முதல் 100 வரையில்."

"இதுவரையில் எத்தனை மைல் பிரயாணம் செய்திருக்கிறீர்கள்?"

"22,300 மைல் தூரம்! 2,300 மணி சவாரி செய்திருக்கிறேன். அதாவது கிட்டத்தட்ட 100 நாட்கள்."

"பேஷ் பேஷ்! எந்த எந்த நாடுகளைப் பார்த்தீர்கள்?"

"பிரான்ஸ்,ஸ்பெயின்,போர்த்துகல்,மொராக்கோ,ஸ்விட்சர்லாந்து, இத்தாலி, யுகோஸ்லாவியா, கிரீஸ், துருக்கி, ஸிரியா, லெபனன், எகிப்து, சூடான், ட்ரான்ஸ் ஜார்டன், இராக், ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான். இப்போது இங்கே வந்திருக்கிறேன். டில்லி, கல்கத்தா, பம்பாய் முதலிய பிரதான நகரங்களைப் பார்த்துவிட்டேன். இன்னும் பல க்ஷேத்திரங்களையும் ஆலயங்களையும் பார்த்துவிட்டேன். தாஜ்மஹல், குதுப்மினார்போன்ற சரித்திர முக்கியமான கட்டிடங்களையும் பார்த்தேன். இப்போது தென்னாட்டுக்கு வந்திருக்கிறேன். இந்தியா முடிந்ததும் ஜப்பான், அமெரிக்காவுக்குப் போவேன்."

"நீங்கள் பார்த்த தேசத்துச் சிறுவர்களைப்பற்றியும் அவர்களுடைய வாழ்க்கைமுறை பற்றியும் சுருக்கமாகக் கூறமுடியுமா?"

"கஷ்டம்தான். வாழ்க்கை முறையில் அதிசயமாகப் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. ஆனால் குழந்தைகள் படிக்கவும், அவர்கள் உல்லாசமாக வளரவும் பல வசதிகள் பலநாடுகளில் செய்யப்பட்டிருக்கின்றன. சென்ற யுத்தத்தினால் பல நாடுகள் சீர்கேடு அடைந்து விட்டன. ஆயினும் நான் பார்த்தவரையில் கட்டாயக் கல்வியும், இலவசக் கல்வியும், குழந்தை பராமரிப்பு வசதிகளும் இல்லாத நாடுகளே அநேகமாக ஐரோப்பாவில் இல்லை. ஆனால் இந்த நாட்டில் குழந்தைகள் கல்வி விஷயத்தில் அதிக அக்கறை காட்டவில்லை என்றே எனக்குப் படுகிறது."

"உங்கள் நாட்டுக் குழந்தைகளுக்குத் தாய்ப் பாஷை தவிர வேறு பாஷைகள் கற்றுக்கொடுக்கப் படுகின்றனவா?"

"ஆங்கிலத்தை அநேகமாக எல்லாரும் கற்றுக் கொள்கிறார்கள். வேறு சில ஐரோப்பிய மொழிகளையும் சிலர் பயில்கிறார்கள்."

"ஜெர்மனியில் சிறுவர் பத்திரிகைகள் உண்டா?"

"உண்டு. ஆனால் இந்தமாதிரியில்லை. ஆங்காங்கே பள்ளிக்கூடப் பத்திரிகைகளைப்போல் நடைபெறுகிறது."

"இந்த நாட்டுக் குழந்தைகளைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"இந்தியக் குழந்தைகள் பொதுவாக சங்கோஜிகளாக இருக்கிறார்கள். ஆனால் வெகு புத்திசாலிகளாக இருக்கிறார்கள். வட இந்தியாவைவிட, தென்னாட்டுக் குழந்தைகள் இன்னும் ஹாஸ்ய உணர்ச்சியும் திருப்தியான மனம் உள்ளவர்களாயும் இருக்கிறார்கள். பிறரை உபசரிப்பதில் உண்மையான அன்பும் எளிமையும் இருக்கின்றன."

"உங்கள் நாட்டுக் குழந்தைகளுக்கு எத்தகைய விளையாட்டுக்கள் பிடிக்கின்றன?"

"அநேகமாக எல்லா விளையாட்டுக்களுமே நாங்கள் விளையாடுகிறோம். இங்கே இல்லாத பனிச் சறுக்கு, படகில் சென்று மீன்

பிடித்தல் போன்ற விளையாட்டுக்களும் விளையாடுவதுண்டு. புட்பால், கிரிக்கெட், ஹாக்கி முதலியனவே எங்கும் போல் எங்களுக்கும் சகஜமானவை."

"சிறுவர்களுக்காக எழுதும் ஆசிரியர்கள் சிலரைச் சொல்ல முடியுமா?"

"உங்களுக்கு உச்சரிப்பு விளங்குமோ, என்னவோ, நான் சொல்கிறேன். கெப்பர், ஜோஹேன், ஸ்பிர்ஜ்....எங்களுக்கு யட்சிணிக் கதைகளும், நாடோடிக் கதைகளும், பழங்காலக் கதைகளும் ஏராளமாகக் கூறப்பட்டு வருகின்றன. ஷில்லர், க்ரிம், கதே, லெஸ்ஸிங் முதலானோர்களுடைய நூல்களை நாங்கள் விரும்பிப் படிக்கிறோம். கொலை, கொள்ளை, திருட்டு முதலியவை கொண்ட கதைகளை நாங்கள் படிப்பதில்லை. வயதானால்தான் எதையும் படிக்கலாமே. சிறுவயசில் நல்ல பண்புகள் வளர இவை தடையாக இருக்கும் என்பது எங்கள் பெரியோர் கருத்து."

"ஹிட்லரைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"ஒருவன் ஒரு காரியத்தைச் சாதித்திருந்தால் கெட்டிக்காரன் என்கிறோம். தவறினால் மூர்க்கன், வெறியன் என்கிறோம். அவர் எப்படிப்பட்டவர் என்பது எனக்குச் சரியாகத் தெரியாது. நான் அப்போது சிறுவன். எங்கள் நாடு மோசமான நிலைக்கு வந்துவிட்டது. ஹிட்லர் ஏதோ தவறு செய்துவிட்டார். அது மட்டுமே தெரிகிறது."

"இந்தியாவைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"இது சிறிய கேள்வி. ஆனால் பெரிதாக நான் விடை சொல்ல வேண்டும். இந்தியாவைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் ஹிமய மலையும், மகாத்மா காந்தியும், புனித கங்கையும், கள்ளங்கபடமற்ற சமாதானப் பிரியர்களான மக்களும், பசுமையான வயல்களும் என் முன்னே தோன்றுகின்றன. இந்த நாட்டு வேத நூல்களும், தொன்மையான இலக்கியங்களும் எந்தக் காலத்துக்கும், எந்த நாட்டுக்கும் பயன்படக்கூடியவை. அறிவின் சிகரத்தை எட்டிய இந்த நாடு புண்ணிய நாடு என்பதில் சந்தேகமில்லை. இந்த நாட்டு இளைஞர்களும் குழந்தைகளும் மகா பாக்கியசாலிகள் என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை. இதை எங்கள் நாட்டுக் குழந்தைகளுக்குப் போய் படித்துப் படித்துச் சொல்லப் போகிறேன். ஸ்பெயின் நல்ல நாடு. சுவிட்சர்லாந்து காஷ்மீர் போல் இயற்கையழகு நிரம்பியது. ரோமாபுரியும் கிரேக்க நாடும் சரித்திரப் பெருமை வாய்ந்தவை. இவைகளையும் இன்னும் பல நாட்டின் விசித்திரங்களையும் விட இந்த நாட்டின் அடக்கமே என்னைக் கவர்ந்து வி[illegible]து.

[illegible]ரயனைக் பல [illegible]ர். ஆனால் இவை போதுமே!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

கர்க்கி
- உபதலைவர்கள்: P. N. சர்மா
  K. S. ராமன்
- செயலாளர்: S. சுப்ரமணியன்
- பொருளாளர்: R. பாலகிருஷ்ணன்

பதினன்கு பேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கையெழுத்துப் பத்திரிகை ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

விஜயபுரம்
- உபதலைவர்கள்: S. பாலசுப்ரமணியன்
  N. பாலசுப்ரமணியன்
- செயலாளர்: R. S. மணி
- பொக்கிஷதார்: V. சீதாராமன்
- உப பொக்கிஷதார்: V. ராமசந்திரன்

ஐந்து பேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 'சுடர்' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது.

ஆலந்தூர் சென்னை-16
- உபதலைவர்கள்: V. N. சிவராமன்
  V. S. ராதாகிருஷ்ணன்
- செயலாளர்: N. சாயிகிருஷ்ணன்
- பொக்கிஷதார்: T. வாசுதேவன்

இருபது பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணன் வாசகசாலை ஒன்றும் கிரிக்கெட் கிளப்பு ஒன்றும் நடத்தப்படுகின்றன.

பேனு நண்பர்கள்:

1. S. சுப்ரமணியன், 65/4. பார்க் ரோட், கர்க்கி.
2. V. S. ராதாகிருஷ்ணன், 340-A, பெங்கால் பஜார் ரோடு, ஆலந்தூர், சென்னை-16.
3. S. பாலசுப்பிரமணியன், 28. அக்கிரகாரம், விஜயபுரம், திருவாரூர், தஞ்சை ஜில்லா.
4. K. K. தியாகராஜன், 6, கொண்டயம்பேட்டை அக்கிரகாரம், திருவானைக்காவல்.
5. K.K. துளசிராம், 10. தொட்டு சந்திரையர் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
6. V. V. ரமணி, T. 181. ரெயில்வே காலனி, மதுரை.
7. S. S. லிங்கம், 87. கொழும்பு வீதி, கண்டி.
8. S. சேதுராமன், 60. பாலகோபாலபுரம் வீதி, பொள்ளாச்சி.
9. A. ஸ்ரீநிவாஸன், 21, அப்பாசாமிப் பிள்ளைத் தெரு, சென்னை-12
10. K. S. முகமதுசாலி, பள்ளிவாசல் தெரு, கட்டிமேடு, தஞ்சை ஜில்லா.
11. R. ராகவேந்திரன், C/o J. பீமராவ். B. A., L. T., ஆசிரியர், உயர்நிலைப்பள்ளி, கள்ளக்குறிச்சி. (தெ. ஆ.)
12. S. கிருஷ்ணமூர்த்தி, S/o சீதாராமையர், மேல் குமாரமங்கலம் (தெ. ஆ.)
13. S. ஹபீபுல்லா, மூன்றும் படிவம், பொன்னையா உயர்நிலைப் பள்ளி, பாலக்கரை, திருச்சி.

Reg. No. M. 5542

அலுப்பு மனிதனை வெல்கிறது

தேநீர்

அலுப்பை
வெல்கிறது

தேயிலை போர்டு வெளியிட்டது

PSTB 125